
உ திரு. சகன் 2041 மகாத்மா காந்தி வாழ்க. தனிப்பிரதி விலை அணா ஒன் 1





| | |
|---|---|
| வருட சந்தா முன் பணம் | ரூ 3—0 |
| 6 மாத சந்தா ,, | ரூ 1—12 |
| வெளிநாட்டிற்கு ,, | ரூ 4—0 |

# [வாரப்பதிப்பு]

ஆசிரியர்

ஈ. வெ. இராமசாமி நாயக்கர்

வியாபாரிகள் விளம்பரம் அங் 1க்கு அ. 12
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ 1
தனி விகிதமும் உண்டு.

மாலை 3 | ஈரோடு, பிரபவ-ஹு ஆடிமீ 16 உ (31—7—27) ஞாயிற்றுக்கிழமை. | மலர் 14




## மின் சா ர ர ச ம்.

மின்சாரரசம்.

ஒன்றே எல்லா வியாதிகளுக்கும் தேவாமிர்தம் போன்றதென உலகப்பிரசித்தி பெற்றுள்ளது. எந்த வியாதிக்கும் துளிக்கணக்கில் உபயோகித்து நிமிஷக்கணக்கில் குணம் பெறலாம். பத்தியமில்லை. அனுபானமில்லை. பால்யர் முதல் விருத்தாப்பியர் வரையில் ஸ்திரீகள உள்பட எல்லோரும், எக்காலத்திலும் பயமின்றி இதை உபயோகிக்கலாம. பாஷாண சம்மந்தமான சரக்குகள் இதில் இல்லை.

புட்டி 1-க்கு ரூ. 2.
தபால் சார்ஜ் வேறு.




மின்சாரரசம்.

ஒரு புட்டி கையிலிருந்து விட்டால் வேறு டாக்டர்களை தேட வேண்டிய அவசியமே இராது மனிதர்களுக்கு வரும் ஆபத்தை யார் அறிவார்? எந்தசமயம் எப்படி இருக்குமோ? ஒரு வேளை ஒரு துளி மின்சாரரசமே ஒருவரை மரண அபாயத்திலிருந்து விடுவித்து விடலாம் அப்படி அநேகர் உயிர தப்பியுமிருக்கின்றனர். ஆகவே நோயாளிகளுக்கு இது ஓர் உயிர்த் தோழன். ஒவ்வொரு குடும்பத்திற்கும் இன்றியமையா ஆபத்து நேசன். இன்றைக்கே எழுதுங்கள்.

கைகண்ட மருந்து. கேட்லாக் இனாம்.

விலாசம்:— மின்சாரரசம் கம்பெனி லிமிடெட், சேலம். (S. I.) தந்திவிலாசம்:—"Rasamco"

மதுரையில் இதன் முக்கிய வியாபாரிகள்:-T. N. சோக்கலிங்கம் பிள்ளை & சன்ஸ் இங்கிலீஷ் மருந்து ஷாப் வியாபாரம், வடக்கு சித்திரை வீதி, மதுரை.

மலாய் நாடுகளுக்கு சோல் ஏஜண்டுகள்:— ஆர். இ. முகம்மது காசீம் & கம்பெனி, கிள்ளாங், பினாங், சிங்கப்பூர்.

# $ 500 இனும்! $ 500 இனும்!!


சதாநந்த யோகீஸ்வரருடைய

## மகா வீரியவிருத்தி லேகியத்தை

நாற்பது நாளும் சாப்பிட்டு குணமில்லையென்று நிரூபித்தாலும் சரி அல்லது இந்த லேகியத்தைப்போல் எவனேனும் செய்துகொடுப்பதாயிருந்தாலும் சரி மேல்கண்ட 500 (ரிங்கி ஐந்நூறும்) எங்கள் கம்பெனியிலிருந்து வெகுமதியாய்க் கொடுக்கப்படும்.

ஒருமுறை பரிக்ஷித்துப் பாருங்கள்.

இம்மகா வீரியவிர்த்தி லேகியமானது பெரிய தபோதனர்களால் அளிக்கப்பட்டது. இந்தலேகியம் அதி விலையுயர்ந்த பொருள்களாகிய அப்ரேக், அம்பர் கஸ்தூரி, குங்குமப்பூ, வாதாம்பருப்பு, பிஸ்தா பருப்பு இன்னுமனேகவிதமான கொட்டைகளையும், மூலிகைகளையும், பஸ்பவகைகளையுங்கொண்டு செய்யப்பட்டது இந்த அரிய லேகியமானது இவ்வளவு உயர்ந்த பொருள்களை யடக்கியதாகயிருந்தும், இதை தன வந்தர் முதற் கொண்டு தரித்திரர் வரையிலும் யாதொரு கஷ்டமின்றி வாங்கி சாப்பிட்டு இதன் அபூர்வ சக்தியையும், துரித சௌக்கியத்தையும் அடையும் பொருட்டே மிகக்குறைந்த விலைக்கு விற்கப்பட்டு வருகிறது. இது ஆண் தன்மையை செட்டிப்படுத்துவதோடு புருஷ தன்மையில்லாமை, அசக்தி பலவீனம் மூதலியவைகளை போக்கி சுறு சுறுப்பையும் பலத்தையும் கொடுக்கும் இதுவுமன்றி நித்திரையில் நீர்வடிதலையும் நிற்கச் செய்யும். இந்த லேகியம் பிள்ளை பெற சக்தியில்லாத பெண் பிள்ளைகளுக்கு தேவாமிர்தம் போன்றது. இதை ஒருமுறைவாங்கி சாப்பிட்டு பரீட்சை பார்த்தாலன்றி இதன் உண்மை விளங்காது. இதற்கு அத்தாட்சியாக அநேக டாக்டர்மார்களும் ஆயுள் வேதவைத்திய சிகாமணிகளும், சித்த வைத்திய பதிகளும், யூனனி வைத்திய பண்டிதர்களும் இன்னம் அநேக பிரமுகர்களும் இந்த லேகியத்திற்காக ஏராளமான நற்சாட்சி பத்திரம் அளித்திருப்பதிலிருந்தே இதன் உண்மை விளங்கும் அவற்றில் சிலதை மாதிரிக்காக பெயர்களை மாத்திரம் அடியில் குறிப்பிடுகிறோம்.




உறுதிமொழிப் பத்திரம்

டாக்டர் M. சோட்டாசிங் L. M. S.
டாக்டர் S. துரைசாமி பிள்ளை பிரிட்டிஷ் இந்தியா டிஸ்பன்சரி
டாக்டர் M. பார்த்தசாரதி C. D. Ac.
Mr. S ஜோஸ் டிவிஷனல் எஞ்சினீர் G. P. O.
கடப்பை, பரமஹம்ஸ சச்சிதானந்த யோகீஸ்பரரின் பிரதம சிஷ்யரும், வேதாந்த வைத்திய ஜோதிஷ பூஷணம் சாது சோமசுந்தர சுவாமிகள்.

திருப்பாதிரிப்புலியூர் ஆயுர்வேத பண்டிதர் ஸ்ரீமான் இ. வீராசாமி நாயுடு அவர்கள்
ஆயுர்வேத வைத்திய பண்டிதர், வை. கந்தசாமி பிள்ளை ஆயுர்வேத சித்தவைத்திய பூஷணம்.
ரூ. லாஸாஸ் பண்டிதன் ஸ்ரீமத் T. R, மகாதேவ பண்டிதர் அவர்களின் மருமகரும் மாணாக்கருமாகிய மகா-ா-ா ஸ்ரீ M. நடராஜ பிள்ளை

முழு விபரமும் கேட்லாக்கில் பார்க்கவும், 20-நாள் சாப்பிடக்கூடிய லேகியத்தின் விலை $ 2-வெள்ளிதான் ஆனால் ஒவ்வொருவரும் 40 நாளைக்கு குறையாமல் சாப்பிடவேண்டும், பத்தியமில்லை, போஸ்டேஜ் வேறு, உடனே எழுதுங்கள். 40 நாள் சாப்பிடக்கூடிய லேகியம் $ 3-75,

பிரான்ஜ் ஆபீஸ்:— 17, சைனு ஸ்திரீட், பினாங்கு.

ஹெட் ஆபீஸ்:— காந்த ரசம் கம்பெனி, 251 சிராங்கூன் ரோட், சிங்கப்பூர்.

குறிப்பு:-இந்தியா இலங்கை பர்மாவிலுள்ளவர்கள் ஆர்டருடன் போஸ்டேஜ் உள்பட முன்பணம் அனுப்பினாலல்லது மருந்து அனுப்பப்படமாட்டாது

## மதனகல்ப லேகியம்.

மலக்கட்டு, பசியின்மை, துரிதஸ்கலிதம் சொப்பனஸ்கலிதம் முதலியவற்றைக் குணப்படுத்தி இந்திரியத்தைக் கட்டுவதில் சிறந்த ருசிகர சித்தரசாயனம். விலை சேர் 1க்கு ரூ. 2 வி. பி. வேறு

ஆனந்த நிலையம், திருச்செங்கோடு (S I.)

## மகா ரசகெந்திமெழுகு.

தீராத வெண்குஷ்டம், கருங்குஷ்டம், திமிர் குஷ்டம், மேகம், ரணம், சூலை முதலிய கொடிய ரோகங்களை 1 மண்டலத்தில் பறக்கடிக்கிறது. 1 மண்டலமருந்து விலை ரூ! 4 வி. பி. வேறு கேட்லாக் இனும்.

ஆனந்த நிலையம், திருச்செங்கோடு S. I-

## சூதகரோக நிவாரணி.

பெண்களுக்குள்ள சூதகக்கட்டி, சூதகச்சிக்கல் வயிற்று வலி, சதை வளர்ச்சி முதலியவற்றைத் தீர்க்கும் அமிர்த சஞ்சீவி. கேட்லாக் இனும் விலை ரூ. 2. வி. பி. வேறு.

ஆனந்த நிலையம், திருச்சங்கோடு.

குறைந்த விலையில் மிகச் சிறந்த ஸில்க்!

# அமெரிக்கன் ஸில்க்

தூய்ய வெள்ளை, திக்கான பட்டு, தினசரி சலவை செய்யலாம். 5 முழ நீளம் x 40 இஞ்சி அகலமுள்ளது நீடித்த உழைப்பிற்கு உத்தரவாதம்.

பாக்கிங் தபால் செலவு இனும் விலை ரூ. 6—8—0

கே. எஸ். முத்தையா கம்பெனி, தபாற் பெட்டி 99, சென்னை.

# சிருவயல்

**நாட்டுக்கோட்டை நகரத்து சுற்றுப்பிரயாணத்தில் சிருவயல் காந்தி ஆஸ்ரமத்தாரும் ஆதிதிராவிட வாலிப சங்கத்தாரும் ஸ்ரீமான் நாயக்கருக்கு அளித்த வரவேற்புப் பத்திரங்களுக்கு பதிலளிக்கும் பொழுது ஸ்ரீமான் நாயக்கர் செய்த சொற்பொழிவு.**

20-7-27 தேதி காலை சிருவயல் காந்தி ஆஸ்ரமத்தாரும் ஆதிதிராவிட வாலிப சங்கத்தாரும், தனித்தனியே இரண்டு வரவேற்பு பத்திரம் வாசித்துக் கொடுத்த சமயம் திரு. நாயக்கர் செய்த சொற்பொழிவின் தத்துவம்.

சகோதரர்களே,

உங்கள் வரவேற்பு பத்திரத்தை நான் ஒப்புக்கொள்ள முடியாதானாலும், என்னைப்பற்றிய புகழுரைகள் போக மீதிஉள்ள வாசகங்கள் எனது கொள்கையை தாங்கள் மனப்பூர்வமாய் ஒப்புக்கொண்டு அதன்படி நடப்பதோடு அதை மற்று அனுபவத்திலும் கொண்டுவர தங்களுடைய சம்மதத்தை தெரிவிக்கின்றன. ஆதலால் அதைப்பொறுத்தவரை வந்தனத்துடன் ஏற்றுக்கொள்ளுகிறேன்.

நான் ஏதோ பிரமாதமான காரியங்கள் செய்துவிட்டதாகவும் பெரும் தியாகம் செய்திருப்பதாகவும் குறிப்பிட்டிருக்கிறீர்கள்: அவ்விதமாகச் சொல்லுவதற்கு ஒன்றும் இல்லை. ஜெயில் வாசத்தைப்பற்றி சொல்லியிருப்பது மிகவும் வேடிக்கையானது. ஜெயிலுக்குப் போவதனால் பெரிய கஷ்டநஷ்டம் ஒன்றுமில்லை. சந்தோஷமாகவும் சாந்தியுடனும் ஓய்வெடுத்துக்கொள்ள மனிசனுக்கு ஜெயிலைவிட வேறு இடம் இல்லை. ஜெயிலில் இருக்கிறகாலம்வரை வெளியில் தொண்டு செய்வதற்கு சந்தர்ப்பம் இல்லாமல் போய்விடுகிறதே என்கிற ஒரு கவலை தவிர மற்றபடி வேறு ஒன்றும் இல்லை. ஆனால் வெளியில் வந்தால் முன்னிலும் அதிகமாக வேலை செய்யக்கூடிய ஆற்றலும் எழுச்சியும் உண்டாய் விடுகிறது. ஆகலால் அது ஒரு குறிப்பிடத்தக்க விஷயமே அல்ல. உலகத்தில் உள்ள மக்களும் மற்றும் ஜீவன்களும் அதனதன் உயிர் உள்ளவரை யாதாவது ஒரு தொழில் செய்துகொண்டுதான் இருக்கவேண்டியது ஜீவ சுபாபம். தொழிலில்லாமல் இருக்கவே முடியாது. சும்மா இருப்பது என்பதும் ஒரு தொழிலேயாகும், அன்றியும் அது மற்ற எல்லாத் தொழிலையும் விட மிகவும் கஷ்டமானது. கிரமமாய்ச் சொல்வதானால் செத்தால்தான் சும்மா இருக்கமுடியும். ஒவ்வொரு மனிதனும் ஒவ்வொரு தொழிலில் ஈடுபட்டு இருப்பது போல் அதாவது ஒருவன் வியாபாரம், ஒருவன் உத்தியோகம், ஒருவன் சாமியார், ஒருவன் பத்திரிகை ஆசிரியன், ஒருவன் தேசத்தலைவன், ஒருவன் பூசாரி, ஒருவன் காசி வியாபாரம், ஒருவன் கள்ளு வியாபாரி என்பதாக பலர் பல தொழில் செய்வதுபோல் நானும் ஏதேதோ தொழில் செய்து இப்போது இந்த தொழில் செய்கிறேன். இவைகள் செயற்கை வாசனை தற்செயல் முதலிய பல காரணங்களால் இது ஏற்பட்டனவே தவிர இதற்குப்பிரமாதமான யோக்கியதை ஒன்றும் கொடுக்கவேண்டியது இல்லை என்பதே என்னபிப்பிராயம். மனித வாழ்க்கையில் ஒவ்வொருவனுக்கும் இம்மாதிரி ஏதாவது ஒரு தொழில் இருந்துதான் தீரும். எந்த தொழிலை யார் செய்தாலும் அவனவன் ஜீவ சுபாவத்தைக் காட்டுவதிலொன்றுகுமே ஒழிய அதற்கு யோக்கியதை கொடுக்க வேண்டியதில்லை. இவைகள் உலக வாழ்க்கையில் மாறிமாறி வரவும் கூடும். இந்நிலையில் ஒரு மாற்றம் மக்களுக்கு அனுகூலம் இருப்பது போலவும், ஒரு சமயம் அவருக்கு மாத்திரம் சயநலம் இருப்பதுபோலவும் மற்றொரு சமயம் ஒன்றுக்கும் உதவாமல் மக்களையும் கெடுத்தாலும் தெரிவதாகவும் காணப்படும். இவ்வித ஜீவ சுபாவமான தோற்றங்களைக் காணுவதினாலேயே ஆச்சரியப்படத்தக்கதும் புகழத்தக்கதும் ஒன்றுமில்லை. தவிர எனது தொண்டாகிய சுயமரியாதை இயக்கத்திற்கு பொது மக்களின் எதிர்ப்பு இருக்குமோ என எண்ணிப்பயந்து கொண்டுவந்த உங்கள் ஊரில் நீங்கள் ஆதரித்திருப்பதானது எனக்கு மேலும் மேலும் மகிழ்ச்சியையும் ஊக்கத்தையும் அடக்கமுடியாத மன உறுதியையும் கொடுக்கிறது, சுயமரியாதை தத்துவமும் இயக்கமும் நமக்கு புதிதல்ல, அது இன்று நேற்று ஏற்பட்டதல்ல. அது மனிதன் எந்தக்காலத்தில் ஏற்பட்டானோ, எந்தக்காலத்தில் மனிதத்தன்மையும் பகுத்தறிவு உணர்வும் அவனுக்கு ஏற்பட்டதோ அன்றுமுதலே சுயமரியாதை உணர்ச்சி மக்களுக்கு ஏற்பட்டுத்தான் வருகிறது. ஆனால் அதன் எதிரிகள் அதாவது ஒரு மனிதனுக்கு சுயமரியாதை உணர்ச்சி ஏற்படுவதால் மற்றொரு மனிதனுடைய சுகவாழ்க்கைக்கும் உயர்வுக்கும் தடை ஏற்படுமானால் அந்த தடைக்கு ஆளாகிறவன் மற்றவனின் சுயமரியாதைக்கு விரோதமாயிருந்து அதனை ஒழிக்க வேண்டியது அவனது கடமையாகிற காலத்தில் கொஞ்சம் கொஞ்சம் மறைபடுகிறதுண்டு.

ஆனால் அது ஒரே அடியாய் ஒரு நாளும் மறைந்துபோகக்கூடியதல்ல.

## ஆதிதிராவிடர்.

தவிர, ஆதிதிராவிடர்கள் என்கிற பெயரால் எனக்கு ஒரு வரவேற்புபத்திரம் அளித்துக்கொடுத்திருப்பதற்கு இரண்டொரு வார்த்தை சொல்லுகிறேன். நீங்கள் ஆதிதிராவிடர்கள் என்ற ஒரு பெயர் பெற்று இருப்பது உங்கள் சமூகத்தில் ஏற்படுத்தப்பட்ட இழிவைமாற்றிக்கொள்வதற்கு அனுகூலமானதென்று நினைத்திருக்கிறீர்கள். உங்களை கொஞ்ச காலத்திற்கு முன்பு பறையர்கள், சக்கிலியர்கள், பள்ளர்கள், என்று சொல்லிக்கொண்டிருந்த காலத்தில் அவ்வார்த்தைகளுக்கு என்ன பொருளும் தத்துவமும் இருந்ததோ அதேபொருளும் தத்துவமும் தான் "ஆதிதிராவிடர்," என்ற வார்த்தையிலும் இருக்கிறதேயல்லாமல் எந்தவிதத்திலாவது அது மறைவுபட்டதாக காணவில்லை.

"பெருமாள்" என்பதாக பெயரையுடைய ஒரு 'பறையன்' ஒரு பார்ப்பனனிடம் அடிமையாய் இருந்த காலத்தில் அந்த பார்ப்பனன் அந்த பறையனை பெருமாள் என்று கூப்பிடுவது தனது பார்ப்பனீய கௌரவத்திற்கு குறைவாய் இருப்பதாக எண்ணி, பெயர் வேறு பெயர் மாற்றிக்கொண்டு வரும்படி, கொஞ்சம் பொருள் கொடுத்து கேட்டுக்கொண்டதாகவும் அந்த பறையன் பெருமாள் என்ற பெயரை மாற்றி, பெரிய பெருமாள் என்று வைத்துக்கொண்டு வந்ததாகவும், அதன் பேரில் இந்த பார்ப்பனன் பழைய பெயரைவிட புதுப்பெயர் ரொம்பவும் மோசமாய் போய்விட்டதாககருதினதாகவும், ஒரு கதைசொல்வதுண்டு. அதுபோலவே பறையர்என்கிறபெயர்மாறி ஆதிதிராவிடர்என்கிற பெயர் வந்ததினால் பறையருக்குண்டான" இழிவுதத்துவம் ஒருசிறிதும் மாறாமல் ஆதிதிராவிடன் என்றால் பறையன் இழிந்த மகன் என்ற அர்த்தத்தைக் கொடுப்பதோடு, தேசத்தின் யோக்கியதையையும் இழிவுபடுத்தத்தக்க தான பொருளும் அதில் அடங்கி இருக்கிறது, இதைவிட பழய பெயரேமேலானதென்பது எனது அபிப்பிராயம். சமூகத்திற்கோ, சங்கத்திற்கோ ஒரு பெயர்வைக்கவேண்டுமானால் எந்த குற்றத்தை நீக்குவதற்காகவோ, அல்லது எவ்வித இழிவை விலக்குவதற்காகவோ எம்மாதிரி முன்னேற்றத்தை அடையவேண்டுமென்பதற்காகவோ நாம் கருதி இருக்கிறோமோ அந்த கருத்தை கொண்டதான பெயரைஒருபிரசாரத்திற்கோ, இயக்கத்திற்கு இடுவதுதான் அறிவுடைமையாகும். உதாரணமாக நமது நாட்டில் பார்ப்பனர் தவிர ஏனையமக்கள் பார்ப்பனர்களால் இழிவு படுத்தப்பட்டும் கொடுமைப்படுத்தப்பட்டும் இருப்பதை உணர்ந்து அவ்விழிவிலும் கொடுமையிலுமிருந்து மீள்வதற்காக ஏற்படுத்திக்கொண்டிருக்கும் சங்கத்திற்கும் வைத்துக்கொண்டிருக்கும் பெயர்களை பார்த்தால் உங்களுக்குவிளங்காமல்போகாது. பார்ப்பனர்களுடைய கொடுமையிலிருந்தே மீளுவதற்காக ஏற்படுத்திக்கொண்டதாகலால் "பார்ப்பனரல்லாதார்" என்கிற பெயரோடும் அக்கொடுமையால் தாழ்த்தப்பட்டதிலிருந்து விலகி பார்ப்பனரல்லாதார் உரிமையை அடைவதற்காக ஏற்படுத்திய சங்கமாதலால் அதே கருத்து தொனிக்க தெ. இ. ந. உ. சங்கமென்பதாகவும் பெயர் கொடுக்கப்பட்டிருப்பதை நீங்கள் உணரலாம். மற்றபடி வேறு எந்த பெயர் வைத்தாலும் இழிவு மறைபவோ, இழிவுபடுத்தினவர்களுடைய சூழ்ச்சிகளிலிருந்து தப்பவோ, முன்னேற்றமடையவோ, பெயர் மூலியமாய் அடையக்கூடிய நன்மையை அடையவே முடியாது. எத்தனையோ சமூகத்தார் தங்களை மற்றவர்கள் இழிவு படுத்துவதிலிருந்து தப்பித்துக் கொள்ளலாமென்று கருதி எவ்வளவோ பெயர்களை மாற்றிக்கொண்டு இருக்கிறார்கள். இதனால் அவர்கள் எந்த இழிவை மறைக்க நினைத்தார்களோ அது ஒரு சிறிதும் மறைபடாமலும் அந்த பெயர் வேற்படுத்துவதற்கு முன் எப்படி இருந்தார்களோ' அது போலவே தான் இருந்து வருகின்றார்களே தவிர புது மாதிரியான மாறுதல் ஒன்றும் ஏற்பட்டு விடவில்லை. உதாரணமாக ஆசாரிமார்கள் தேவாங்க சமூகத்தார்கள் முதலியவர்கள் தங்களுக்கு விஸ்வ பிராமணர்கள் தேவாங்க பிராமணர்கள் என்பதாக பெயர் வைத்துக்கொண்டதாலும் நாயக்கர்மார்கள் படையாச்சிமார்கள் நாடார்மார்கள், தங்களுக்கு பல்ஜிய க்ஷத்திரியர்கள், வன்னிய க்ஷத்திரியர்கள் அக்னி குல க்ஷத்திரியர்கள் என்பதாக பெயர் வைத்துக்கொண்டாலும் நாட்டுக்கோட்டை நகரத்தார், நகரத்து செட்டியார், கோமுட்டி செட்டியார், வாணிய செட்டியார், வேளாளர் முதலியோர் தங்களுக்கு முறையே தன வைசியர், கோத்து வைசியர், ஆரிய வைசியர், வாணிய வைசியர், பூவைசியர் என்பதாக பெயர் வைத்துக்கொண்டாலும் புராணங்கள் மூலியமாக இதற்கு ஆதாரம் கண்டு பிடித்தாலும் மாற்றுப் எத்தனையோ வகுப்பார் எத்தனையோ மற்றப் பெயர்களை வைத்துக்கொண்டு இருந்தாலும், இந்த பெயர்களல்லாத "சூத்திரர்கள்" என்கிற பெயருக்குண்டான பொருளும் தத்துவமும், [illegible] உண்மையும் [illegible]றதே அல்லாமல் ஒரு சிறிதாவது மாற்றம் ஏற்பட்டதோடு எந்த பே

ள்கையை உபதேசித்து நூதன பெயரை வைத்துக் கொள்ளுகிறோமோ, அந்த கொள்கைகளின் மூலியமாகவே நாம் நம்மைவிட மற்றொரு கூட்டத்தார் உயர்வு என்பதையும் மற்றொரு கூட்டத்தாரைவிட நாம் தாழ்ந்தவர்கள் என்பதையும் ஒப்புக்கொண்டதோடு அதை நிலைநிறுத்தவும் பாடுபட்டவர்களாகிறோம்.

ஆகவே இம்மாதிரி பெயர்களை வைத்துக்கொள்வது "சப்தம்" மாத்திரத்தில உயர்வாக தோன்றினாலும் தத்துவத்தின் மூலியமாக அதில் தாழ்மையே இருக்கிறது. ஆதிதிராவிடர் என்று சொல்லிக்கொள்பவர்களாகிய நீங்கள் உங்களை யார் தாழ்த்தவர்கள் என்று சொல்லுகிறார்களோ யார் கொடுமைப்படுத்துகிறார்களோ, யார் அசுத்த ஆசாரமாய் இருக்கிறார்களோ "அவர்கள் பெயரை வைத்து "அவர்கள் அல்லாதார்" என்பதாக வைத்துக்கொண்டால் அந்த பெயரும் கொடுமையும் ஞாபகத்தில் இருப்பதோடு அதிலிருந்து விலகுவதற்கு உண்டான அறிவும் சக்தியும் அதிலிருந்து ஏற்படும். இந்த கூட்டத்திலேயே ஒரு கனவான் உங்களை "ஒடுக்கப்பட்டார்" என்றழைக்கலாம் என்பதாக சொல்லுகிறார். எனக்கு அதுகூட அவ்வளவு சரியான பெயர் என்பதாக தோன்றவில்லை. வேண்டுமானால், "ஒடுக்கினவர்கள் அல்லாதார்" "கொடுமைக்காரர்களல்லாதார்". 'அயோக்கியர்கள் அல்லாதார்' என்று பெயர் வைத்துக்கொண்டால் அவர்களையும் உங்கள் கூட்டத்தில் சேர்க்காமல் சீக்கிரத்தில் இக்கொடுமை நீங்கவும் மார்க்கம் ஏற்படும். அப்படி ஏற்பட்டாலன்றி பெயர் மறைந்து விடுவதற்கும் அநுகூலம் ஏற்படும். அப்படிக்கில்லாமல் க்ஷத்திரியர், வைசியர், அருந்ததியார், ஆதிதிராவிடர், இந்திரகுலத்தார் நீலகண்டனார் பார்க்கவனார் என்று, இம்மாதிரி பெயர் வைத்துக்கொள்வதால் நமக்கு நாமே சொல்லிக்கொண்டு கற்ப கோடி காலம் இந்த இழிவிலேயே இருக்கவேண்டியது தானே ஒழிய நாம் கோரும் பலன் ஒரு சிறிதும் அதனால் உண்டாகாது. சிலர், இந்தகொள்கையோடு பேர் வைப்பதின் மூலம், பெருத்த ஆக்ஷேபனை இருப்பதாக காட்டிக் கொள்ளுகிறார்கள். அது ஒரு சிறிதும் உண்மையானதென்றாவது மனப்பூர்த்தியாய் சொல்லுகிறார்கள் என்றாவது ஒரு சிறிதும் எண்ணுவதற்கு இடமிருப்பதாக எனக்கு தோன்றவில்லை. அதாவது "பார்ப்பனரல்லாதார்" என்ற சொல்வதால பார்ப்பனர் என்று ஒருஜாதி இருப்பதாக ஒப்புக்கொள்வதாகவும், அந்த பார்ப்பனர் உயர்ந்தவர்கள் என்கிற தத்துவத்தை ஒப்புக்கொள்வதாகவும், ஜாதி வித்தியாசம் ஒழிய வேண்டுமென்ற எண்ணத்தோடு ஏற்படுத்தின இயக்கம் அதை நிலை நிறுத்துவதற்கு வேலை செய்வதாக ஆகுமென்றும் சொல்லுகிறார்கள். இந்த வார்த்தைகளில் ஏதாவது கடுகளவு சத்து இருக்கிறதா? பார்ப்பனர்கள் என்ற ஒரு கூட்டத்தாரை நாம் தினம் கண்ணில் பார்த்துக்கொண்டுவருகிறோம். அவ்வொரு கூட்டத்தார் இந்த நாட்டில் இருந்துகொண்டு இருக்கிறார்கள், அதையாரும் திரைபோட்டு மறைத்துவிட முடியாது. ஆனதினால் அப்படி ஒருவர் இருக்கிறார்கள் என்பதை ஒப்புக்கொள்வதாகு மென்பது அர்த்தமேயில்லை. அதைத்தவிர இப்படிச்சொல்வதின் மூலம் பார்ப்பனர்கள் உயர்ந்தவர்கள் என்பதை ஒப்புக்கொள்வதாகின்றது என்பது. நமக்கு அதிசயமாகவிருக்கிறது. பார்ப்பனர் என்று சொன்னால் பார்ப்பனன் உயர்ந்தவனென்று ஒப்புக்கொள்வதாகிறது என்று எந்த அகராதியில் எழுதி இருக்கிறதென்பது நமக்கு விளங்கவில்லை. அல்லது பார்ப்பனன் என்று சொல்லும் போது அவன் உயர்ந்தவனென்று எண்ணிக்கொண்டு சொல்லுகிறோமா? என்று பார்த்தால் தெரியவில்லை. 'ஆதிதிராவிடர்' என்று சொல்லும்போது அவர்கள் மிகத் தாழ்ந்தவர்கள் என்ற உணர்ச்சி தோன்றிவிடுகிறது. "பார்ப்பனர்"களென்று சொல்லும்போது நமக்கு பலவித கொடுமைகள் செய்தவர்கள் என்று தான் தோன்றுகிறதேயல்லாமல் பலரும் அம்மாதிரியே நினைக்கும்படியாக கொடுமைகளை ஞாபகப்படுத்தக் கூடியதாக இருக்கிறதேயல்லாமல் வேறு ஏதாவது உயர்வு அதில் இருக்கிறதா? ஏற்படுகிறதா? ஆகவே பார்ப்பனன் உயர்ந்தவன் என்பதை நிலைநிறுத்துவதாக அந்த பதமிருக்கிறது என்று சொல்லுவது தர்மமாகுமா? அதில் ஏதாவது யோக்கியபொறுப்பிருக்கிறதா? தவிர இந்த பெயர் இருப்பதினாலேயே எந்த விதத்தில் இந்த வித்தியாசம் நிலைத்து விடு மென்பதும் நமக்கு விளங்கவில்லை. நமது நாட்டிலுள்ள ஆயிரக்கணக்கான வகுப்பு வித்யாசப் பெயர்களை ஒழிப்பதற்காகவே அவ்வித்தியாசங்களுக்கு மூலாதாரமானவர்களை அந்த வித்யாசத்தை விட்டுவிட்டு நம்மோடுவந்து சேரும்படி அழைக்கும் தத்துவத்தோடுகூட அந்த பெயர் வைக்கப்பட்டு இருக்கிறதே அல்லாமல் அதைநிலை நிறுத்தும் தத்துவம் அதனிடத்தில் இல்லை. அதற்கு உதாரணமாகவே பலபார்ப்பனர்கள் இந்த இயக்கத்தில் வந்து சேர பிரியப்படுவதும், நாம் இது சமயம் பல காரணங்களால் அவர்களிடம் நம்பிக்கை இல்லாமலும், சேர்த்துகொள்வதற்கு இல்லாமலும் இருப்பதால் வேண்டாமென்று சொல்வதாகவும் இருக்கிறதே அல்லாமல் வேறல்ல. [illegible]

## ஆதிதிராவிடர்களுக்கு தனிஸ்தாபனம்.

ஆதிதிராவிடர்களுக்கு என்று தனியாக கிணறு கோவில், பள்ளிக்கூடம் முதலியவைகள் ஏற்படுத்துவது புண்ணியமென்று சிலர் கருதுகிறார்கள். நான் அதை ஒப்புக்கொள்ள முடியாததோடு வெறுக்கவேண்டியவனாகவும் இருக்கிறேன். சென்றவருடம் இதே ஊருக்கு வந்திருந்த சமயம் காந்தி கிணறு என்ற ஒரு கிணற்றை ஆதிதிராவிடர்களுக்கு மாத்திரமென்று வெட்டி அதைத்திறந்து வைக்கும்படி கேட்டுக்கொண்டபோது நான இதே அபிப்பிராயத்தைத் தான் தெரிவித்தேன். காரணமென்னவென்றால், அவர்கள் படிக்கக்கூடாது என்பதற்காகவாவது அவர்களுக்கு தனி சௌகரியம் ஏற்படுத்திக்கொடுக்கக்கூடாது என்பதற்காகவாவது அல்லவே அல்ல. இம்மாதிரி ஒரு வகுப்பாருக்கு தனி சௌகரியம் ஏற்படுத்திக் கொடுத்து நம்மோடு கலந்து வாழும்படி செய்யாததின் பயனாய் நிரந்தரமாய் இவர்கள் இழிந்தவர்கள் என்பதை நிலை நிறுத்தி அவர்களை மீளவிடாமல் செய்தவர்களாகின்றோம். அதுபோலவே பார்ப்பனர்களுக்கும் சிறு தனி உரிமைகள் செய்து கொடுத்து நம்மோடு கலர விட்டுவிடாமல் செய்து வருவதின் பயனாகவே அவர்கள் உயர்ந்தவர்கள் என்பதையும், நாம் தாழ்ந்தவர்கள் என்பதையும் நிலைநிறுத்தினவர்களாகின்றோம். இன்னும் ஆயிரக்கணக்கான வருடங்களுக்கு கோடிக்கணக்கான தொகைகளைச்செலவு செய்து தர்மம், புண்ணியம்,மோட்சம் என்பதின் பெயரால் பார்ப்பனர்களுக்கு தனிப்பள்ளிக்கூடங்களும் சத்திரங்களிலும், கோவில்களிலும் ஏனைய இடங்களிலும் தனி உரிமைகளும் "பறையர்களுக்கு" தனி கிணறும், தனி பள்ளிக்கூட முதலியவைகளும் செய்துகொண்டுவருவதனாலும் ஒருக்காலும் நமது மக்கள் சுயமரியாதை அடைந்து நாடு விடுதலை அடையும் என்று எண்ணுவதற்கு கொஞ்சம் கூட இடமே இல்லை. தாழ்த்தப்பட்ட மக்களை முன்னுக்குகொண்டு வருவதற்கும் சமத்துவமடையச் செய்வதற்கும் பாடுபடும் பெரியோர்கள் அந்த சமூகத்திற்கென்று தனியாக கிணறும், கோவிலும், பள்ளிக்கூடமும், வெட்டவும், கட்டவும் ஏற்படுத்தவும் நினைப்பதானது அச்சமூகத்தாரை நிரந்தரமாய் இழிவு படுத்தி வைப்பதற்கு ஆதாரங்களையும் அடையாளங்களையும் சரித்திரங்களையும், சிலாசாசனங்களையும் உண்டாக்கி வைத்தவர்களே ஆவார்கள். (இப்படிச் சொல்லிக்கொண்டுவரும் போது திரு. எ. வி. தியாகராஜா அவர்கள் ஒன்றுமில்லாமல் இருப்பதற்கு இது மேலல்லவா? என்று கேட்டார்கள்) ஒன்றுமில்லாமல் இருப்பதைவிட இது எந்த விதத்திலும் மேலாகாதென்றும், கிணறும், பள்ளிக்கூடமும், கோயிலும் இல்லாமல் போனால் குடிக்கவும், படிக்கவும் கும்பிடவும் இல்லாமல் போகலாமே தவிர தாழ்ந்தவன் என்பதை நிரந்தரமாய் ஏற்படுத்துவதானது ஒரு சிறிதும் போகவே போகாது. நமது நாட்டில் இதைப்போல அநேக பெரியார்கள் எவ்வளவோ காலமாக இதைவிட மிக பெருத்தபெரும் தர்மங்களை அக்கூட்டத்தாருக்கு செய்து வந்திருந்தும் இதுவரையில் ஒரு சிறிதாவது அவர்கள் நிலைமை முன்னேறி இருப்பதாக சொல்வதற்கில்லை. உதாரணமாக தஞ்சாவூர் ராஜாவின் தர்மசாசனத்தை நான் பார்க்க நேர்ந்த பொழுது இந்த பறையர்களுக்கு என்பதாக பள்ளிக்கூடம், சத்திரம் மற்றும் பல தருமங்கள் முதலியவைகளுக்கு பெரும்பாக மானியங்களை ஒதுக்கிவைத்ததோடு செய்துவந்ததாகவும் தெரிகிறது ஆனால் அந்த ஜில்லாவில் தான் இந்த பறையர்கள் எல்லாரைவிட அதிகமாக அடிமைகளாக விற்கவும் வாங்கவும் படுகிறார்கள். எனவே அந்த வகுப்பாருக்கு யாராவது நன்மை செய்யவேண்டுமானால் மலையளவு செய்யக்கூடிய தன்மையானது கடுகளவு செய்யக்கூடியதாக ஏற்பட்டாலும் அவர்களும் நாமும் கலந்து பழகுவதற்கு தகுந்தபடி ஏற்படுத்துவது தான் அவர்களை முன்னேற்றத்திற்கு கொண்டுவருவதற்கு தக்கவிதமாக ஏற்படுத்தியதாகுமே தவிர அவர்களுக்கு வேறு நமக்கு வேறு என்பதாகவும் அவர்களும் நாமும் சேர்ந்து புழங்குவதற்குச் சாப்பம் இல்லாததாகவும், செய்வதானது செய்தவர்களுக்கு தர்மம் செய்தார் என்று சொல்லிக்கொள்ள உதவலாமே அல்லாமல் ஒருக்காலும் அந்த கொடுமை செய்யப்பட்ட சமூகத்திற்கு நன்மை செய்வதாக ஆகாது. அதோடு தீமை செய்ததாகவும் ஆகலாம். நமது பெரியோர்கள் பார்ப்பனர்களுக்கு வேறு நமக்கு வேறு என்று பல காரியங்கள் செய்துவந்ததின் பயனாகவே அவர்கள் பார்ப்பனர்கள் உயர்ந்தவர்கள் அவர்களைவிட நாம் இழிந்தவர்கள் என்பதற்கு சிலா சாசன ஆதாரமாக இருந்து வருகிறது என்று பேசிமுடித்தார். பின்னர் ஸ்ரீமான் பிச்சப்பா சுப்பிரமணிய செட்டியார் அவர்கள் இதை ஆதரித்துப்பேச ஸ்ரீமான் சவணமுத்துபிள்ளை அவர்களால் வந்தனமளிக்கப்பட்டது. ஒரு சமபந்தி விருந்து நடந்தது.

---

## சிங்கப்பூர்

"சிங்கப்பூர் அரசாங்க சுகாதார காரியாலயத்தில் வேலை பார்த்துவந்த பி. வெ. தியாகராஜப் பிள்ளை அவர்கட்கு சென்ற 6-7-27 தேதியில் திருவாரூர்பட்டப் புரத்தில் விவாகம் நடைபெற்றது. பிராமணரின் உதவியன்றி விவாகச் சடங்கை நடத்தவேண்டுமென்று மணமகன் அவ்வளவோ பிரயத்தனப்பட்டும் சில குறுகிய நோக்கமுடைய வைதிகர்களால் நிறைவேறாமல் போய்விட்டதற்கு மணமகன் பெரிதும் வருந்துகின்றார்.

---

"சுயமரியாதையே நமது பிறப்புரிமை; சுயராஜ்யம் வயிற்றுச் சோற்று உரிமை"

# அவியல்

## 7ம் பாகம்

### கைவல்யசாமியார் எழுதுவது.

வசந்தன்:—என்னருமை சந்திரா கோயமுத்தூர் மகாநாட்டிற்குப் போய் வந்தனே. பல நாட்டினின்றும் அநேகபிரதிநிதிகளும், சுயராஜ்ஜியப் பிரிய முடையவர்களும், ஜன சமூகச் சீர்திருத்தத்தில் அக்கரையுடையவர்களும், அடைய வேண்டியதல் சுயமரியாதையே முக்கிய மென்னும் கொள்கையின் அதிபதிகளும், விஷயங்களைத் தர்க்க ரீதியோடு கூடி சுறுசுறுப்பாய் சுருக்கமாய் விவகரிக்கத் துள்ளிக்குதிக்கும்வாலிபர்களும், கட்சி பேதத்தில் விட்டுக்கொடுக்கும் ஆலோசனைசக்தியுடைய அறிஞர்களும், ராஜ்ஜியத் துறையிலும் சமுதாயச் சீர்திருத்தத்திலும் தம்காலத்தைச்செலவு செய்த பெரியவர்களும், இயற்கை அன்பினில் எல்லாரையும் தழுவி உபசாரணை செய்த உபசாரணைப்பிரியர்களுமாகக் கூடி மகாநாட்டைச் சிறப்பாக நடத்தினதைக் கேட்டேன். அதில் ஜஸ்டிஸ் கட்சியிலிருப்பவர்களில் இஷ்டப்பட்டவர்கள் காங்கிரசில் சேரலாம் என்னும் உத்தாவு பெருவதே முக்கிய பிரசினை என்பது முணர்ந்தேன். இந்த சீர்திருத்தத்தை நடத்தி அனுபோகப்பட்டீர்களானல் பத்தாவது வருடத்தில் உங்களுக்கு இனியும் பெரிய சீர்திருத்தம் கொடுப்போம் என்று இங்கிலீஷ் கவர்மெண்டு சொன்னபடியே சீர்திருத்தத்தைக் கைக்கொண்டுஇதுவரையிலும் நடத்தி இந்திய மந்திரியால் புகழும பெற்ற ஜஸ்டிஸ் கட்சி, அதிக சீர்திருத்தமளிக்க ராயல் கமிஷன் வரும் இந்தக் காலத்தில் காங்கிரசில் சேர அனுமதியளிப்பதற்குச் சொன்னகாரணங்களில் சில முக்கியமல்லாததாயிருந்தாலும் உங்கள் தலைவர்களுக்குள் ரகசிய ஒப்பந்தம் இருக்குமென்று நினைக்க அவை ராஜதந்திரத்தின் போக்காயிருக்குமென்று உணர்கிறேன். காங்கிரசில் போய்ச் சேர்ந்து பாப்பார ஆதிக்கத்தைக் குறைத்து காங்கிரசை செம்மைப்படுத்த வேண்டுமென்று சிலரும், அது எப்படி முடியுமென்று சிலரும் நாங்கள் காங்கிரசில் இருந்து பார்த்தாய் விட்டது அதனால் ஜனசமூகத்திற்கு யாதொரு யாதொரு நன்மையும் செய்ய முடியாதென்று சிலரும், ஜனசமூகத்திற்கு சுயமரியாதையில் சுதந்திரத்தை உண்டுபண்ணிவிட்டால் அவர்களின் நன்மைக்கேற்ற ஒரு காங்கிரசை அவர்களே அமைத்துக்கொள்ளுவார்களென்று சிலரும், மகாத்மா காந்தி போன்ற தன்னலம் கருதா தியாகிகளால் தான் காங்கிரசைக் கைப்பற்றிக்கொள்ள முடியுமென்று சிலரும், அல்லது கனம் எஸ். ஸ்ரீனிவாச அய்யங்காரைப் போன்றுகிலும் எந்தப்பணத்தைக்கொண்டாவது சம்பளமோ ஒப்புக்கடனோ கூலியோ பெறும் ஆள்களைச் சேர்த்தியும் சத்தியம் உண்மை பொதுநலம் இவை கெட்டாலும் வாய் சாமர்த்தியத்தினுல் சமயத்திற்குத்தக்கபடி மாற்றியும்திரித்தும்விவகரித்தும் தன் கூட்டமும் தன் வயிறும் திருப்தியடைந்தால் போதுமென சிலரும், குடிகள் கஷ்டமடைந்தாலும் கள், சாராயம் பிரசுரிப்பதில் தன் லாபத்தை விடாமல் எந்த சமயமும் பாப்பாரல்லாத சமூகத்தின் ஆதிக்கத்தைக் குறைக்கவே பாடுபடும் சுதேசமித்திரனைப்போன்ற பத்திரிகைகளையும் துணையாகக் கொண்டால்தான் காங்கிரசில் ஆதிக்கம் வகிக்கமுடியுமென்று சிலரும், பேசிக்கொண்டதை கேட்டேன். பத்திரிகையில் பலவாறெழுதுவதையும் படித்தேன். அதுவுமல்லாமல் கனம் கலியாண சுந்தர முதலியாரும், கனம் வரதராஜுலு நாயுடுகாரும் பேசினதொன்றும், அவர் போனவுடன் எழுதின தொன்றுமிருக்கிறதென்று 'குடி அரசு' எழுதியுமிருக்கிறது. இதற்கெல்லாம் உன் சமாதானமும் அபிப்பிராயமுமென்ன?

சந்திரன்:—கோவை மகாநாட்டைப்பற்றி நாம் அதிகம் பேசவேண்டுவதில்லை. அதைப்பற்றி அங்கு நடந்தவை எல்லோருக்குந்தெரியும். பஞ்சணையில் படுத்துப்புரளுதலுக்குஎந்தசடையிலும் இடமில்லை என்பதை அநேகர் உணர்ந்திருக்கிறார்கள். பாம்பின் கால் பாம்பறியும் எனனும் பழமொழி போல் பத்திராதிபர்களை பத்திராதிபர்கள்தானறிவார்கள். 'நவசக்தி' 'தமிழ்நாடு' பத்திராதிபர்களைப்பற்றின உன்சங்கைக்குப் போதுமான உத்தரயிப்பொழுது சொல்லமுடியாது. என்றாலும் உன் மனதிருப்திக்கு சிறிது சொல்லுகிறேன். நம் தாய் நாட்டின் க்ஷேமத்தை உள்ளன்புடன் நாடினவர்களென்றும், நம் தமிழ் நாட்டை முன்னுக்குக் கொண்டுவர தன்னாலியன்றளவு சிறிதும் வஞ்சனையின்றி உழைத்து வருபவர்களென்றும், எனக்கு முணக்கும் பட்டிருக்கலாம். அதற்காக நாமும் நம்நாட்டாரும் நன்றி பாராட்டுவோம். அவர்களுக்கும் அவர்களைச் சேர்ந்தவர்களுக்கும் தேவானுக்ரகம் உண்டாகட்டும். ஆனல் அது வேறசங்கதி. காங்கிரசிலும் தென்னிந்திய நலவுரிமைச்சங்கத்திலும் சேருவது மற்றொரு சங்கதி. கௌரவமும் மதிப்பும் ஞாயமும் ஒரு விஷயம். ஒருவர் சொன்னதையும் சொல்லுவதையும் இனிச் சொல்ல வேண்டி ஏற்படுவதையும் புத்திக்குப் பொருத்திப்பாராமலும் சீர்தூக்கிபாராமலும் அலட்சயப்படுத்தி விழுங்கிவிடுவது வேறுவிஷயம். மனுஷ்ய ஜீவனுக்குத் தனிமைக்குணம் ஒன்றிருக்கிறது; தனிமையாகிய களத்திலேதான் அவனுடைய ஆத்மா தன்னைப்ரகாசப்படுத்திக்கொள்ளவும், வளரவும், ஸ்வாதீனமடைகிறது. மனிதன் பொதுநிலையைவிட்டு ஒரு தொழிலாளி (அதாவது யாதானுமோர் வியாபாரம், அல்லது விவகாரத்தால் கட்டுப்பட்டவன்) ஆகும்போது அவனைச்சுற்றி இறுகலான ஓடு தோன்றுகிறது. இந்தத்தொழிலாளித்தனம் என்ற களத்திலே மனிசர் தத்தம் அறிவுகளுக்குத் தனிவழிகள் காட்டித் தமது பலத்தை ஒரு முகமாக்கி தான் தான் முற்பட வேண்டுமென்று பரஸ்பரம் முழங்கைகளால் ஏற்றித் தள்ளுகிறான் அங்குதான் இவன் பெலவீனமடைகிறான். விவகாரத்தால் கட்டுப்படுவதும் தொழிலாளித்தனமும் அவசியமாகவிருக்கலாம். ஆனல் அதை ஆரோக்கியவரம்புகடந்து செல்ல விடக்கூடாது. அது மனிதனை அடிமைப்படுத்தவும் குறுக்கவும் கடினமாக்கவும் ஆதர்ஸங்களின் நம்பிக்கையிழந்து லௌகீக லாபந்தேடுவோனாகச் செய்யவுமிடங்கொடுக்கக்கூடாது என்பதை பெரியவர்கள் உணர்கிறார்கள். 'நவ சக்தி'யைப் போன்று எனக்கு இலக்கிய இணக்கப்பயிற்சி இல்லாவிட்டாலும் "நலமுயமுன் வந்துன்னனர் சேரிய நெஞ்சுடன் நாட்டிலெழும் அரசியல் கட்சிக்கு இடையூறு செய்யாமல் தன்னந் தனியாய் தமது தொண்டை நிகழ்த்துவராக" என்னும் பதங்களும் சேர்க்கைகளும் விசேடமுடையதல்லவென்பதை விவரப்படுத்திச் சொல்ல சிறிது தெரிந்தவன் என்பதை சமையம் கிடைத்தால் உனக்குச்சொல்லுகிறேன். பாண்டியன் பெண்ஜாதியின் கூந்தலின் வாசனையேதுவால் சங்கப்புலவரான நக்கீரனுக்கு முருகக்கடவுளால் இலக்கணம் உபதேசிக்கப்பட்ட கதையும், போஜமகாராஜாவும் மற்றவர்களும் காளிதாசன் கவியே சிறந்ததென்று சொல்லுவதைக் கேட்டு வருத்தமடைந்திருக்கும் மகா வித்வான் தண்டியின்வருத்தத்தை நீக்கி உண்மையை வெளிப்படுத்த ஒருநாள் காளிதாசன் தண்டியை அழைத்துக்கொண்டு போகையில் வெற்றிலை போட சுண்ணாம்பு இல்லாமையால், சுண்ணாம்பு வாங்கிவர அங்கிருந்த ஓட்டன் குடிசையண்டை தண்டிபோய் குடிசையிலிருந்த பெண்ணிடம் ஒரு சுலோகத்தால் சுண்ணாம்பை வர்ணித்து சுண்ணாம்புகேட்க, அப் பெண் முகம் கடுத்து சுண்ணாம்பு இல்லை என்றாள். அதே குடிசைக்குக் காளிதாசன் போய் ஒரு சுலோகத்தால் பெண்ணை வர்ணித்துச் சுண்ணாம்பு கேட்டார். அப்பெண் முகமலர்ந்து சுண்ணாம்பு கொடுத்தாள். இதைக்கண்ட தண்டி, "காளிதாசா நீதான் கவிக்கு சிரேஷ்டமுடையவன்" என்றதையும், அருள் வித்வான் ஒட்டக்கூத்தனுடைய இலக்கணப்பிழையில்லாத நியாயமுடைய பாட்டை சோழன் பெண்ஜாதி அலட்சியப்படுத்தி, லௌகிக முறைநிறைந்த புகழேந்தியின் பாட்டை மரியாதை செய்த கதையும், புலவர்கள் தெரிந்துகொள்ளவேண்டியவைகள். பத அர்த்தம், சப்த அர்த்தம், பாவனு அர்த்தம், குண அர்த்தம், இன்னுமனேக அர்த்தத்தோடு கூடின பதங்களை அர்த்தம் தெரிந்து இலக்கண இலக்கிய பிழையில்லாமல் சேர்த்தாலும், அவை சமயத்திற்குத் தக்கபடி காரியத்திற்கு வேண்டிய இனிமையான பதங்களாகவிருக்கவேண்டும். புறநட்பும் அபிநயமும் அதனால் உண்டாகும் லாபமும் தன்பல்லின் இரத்தத்தை சுவைத்தலால் உண்டாகும் பலனின் திருப்தியே. அபிநயம் பலஹீனத்திற்கு மூலாதாரம். நம்முடைய எலும்புக்கூட்டை மற்றொருவனுடைய தோலினல் போர்த்துக்கொள்ளுவது போலாம். ஒவ்வொரு கம்பீரமும் தோலுக்கும் எலும்புக்கும் தீராத சந்தேகமும்சண்டையுமாகவேயிருக்கும். என்னருமை வசந்தா, உன் சந்தேகங்களுக்கு பொதுப்பட சில தத்துவங்களை மறைமுகமாகச் சொன்னேன். இதனல் உன்மனம் ஒரு திருப்தியடைந்திருக்கும். கோவை மகாநாட்டில் நான் கண்டுகளித்த காட்சிகளையும் சொல்லுகிறேன் கேள். தாங்கள் சொல்லும் வார்த்தையில் தர்க்கம் கேட்டறியாத பிரபுக்கள் பொறுமையோடு கேள்விக்கு சமாதானம் சொல்லுவதும் நாமும் மனிதர்களாகியிருக்கவேண்டும் அபிவிருத்திக்கு எப்பொழுதும் எதிரிடையாயிருக்கின்ற புரோகிதர்களை வெறுத்தள்ள வேண்டுமென்னும் கொள்கையை உடையவர்களும், தென்னாட்டுச் சைவர்களும், தென்னாட்டாரும், பல பகுதி தமிழர்களும், ஒரே பந்தியிலுண்டு உறவாடி ஒன்றுபட்டதன்மைகளும், ஜனங்கள் தங்கள் கஷ்டங்களைத் தாங்களே தீர்த்துக்கொள்ளுவதற்கு தகுதியான குற்றமற்ற பொது ஜன அபிப்பிராயம் உண்டாக வெருகாலம் செல்லுவதாயிருந்தாலும் அந்த அபிப்பிராயத்தை எவ்வளவு சீக்கிரம் ஜன சமூகத்தினிடம் கொண்டுவந்து அவர்கள் துன்பங்களை தீர்க்க உள்ளங்கசிந்துருகுகிறவர்களும், நம் தலைவர்களின் அபிப்பிராயங்களை ஒன்றாய்ச்சேர்க்க அவர்களிடம்போய் ஞாயங்களை சமயோசிதமாக எடுத்துக்காண்பித்து ஒன்றுபடுத்தின புத்தியின் பெலத்தையும், நமது வாலிபர்கள் துள்ளிக்குதித்து தர்க்க ரீதியாய் தர்க்கம் பண்ணுவதும், தலைவர்கள் நோக்கமறிந்து தாழ்வதும் என் மனதிற்கு அளவற்ற ஆனந்தம். ஏனெனில் இருபது வருடங்களுக்கு முன் அநேக சபைகளுக்குப்போய் எனக்கு துணையில்லாத மூடக்கொள்கைகளில் பற்றுதலடைந்து குருட்டு நம்பிக்கையே தங்கள் வித்வச் சிறப்பென்று மதித்துக்கொண்டிருந்த வித்வான்களிடம் அவஸ்தைப்பட்டு என் மனம் சோர்வடைந்திருந்தது. கோவை மகாநாட்டிற்கு வந்திருந்த இளைஞர்களின் மனத்தெழுச்சி என் சோர்வைத்தீர்த்துவிட்டது. இனி சுயமரியாதையைத் தூக்கிச்செல்லும் 'குடியரசின்' குலம் தழைக்குமென்பதை பிரத்தியட்சத்தில் பார்த்தாகிவிட்டது. இவை வித்வச்சிறப்பு மன்று, தத்துவ ஆராய்ச்சியுமன்று, கர்ணகடோர இதிகாசபுராண கட்டுக் கதைகளுமன்று பிரபுக்கள் ராஜாக்களின் ஸ்துதியாலுமன்று. மற்ற என்ன எனில் சக்கர

## வகுப்புவாரி பிரதிநிதித்துவமும் பார்ப்பனத் தலைவர்களும்.

காஞ்சீபுரம் மகாநாட்டிலிருந்து ஸ்ரீமான்கள் ஈ. வெ. ராமசாமி நாயக்கர், எஸ் ராமநாதன், தண்டபாணி பிள்ளை, ஆரியா முதலியவர்கள் வெளியேறின காரணம் இன்னதென்பதும் அது முதல் வேறு தனிப்பிரசாரம் செய்து வருவதின் நோக்கம் இன்னதென்பதும் நமது நேயர்கள் அனேகருக்குத் தெரியும்.

அதாவது மகாநாட்டிற்கு நாயக்கரும் ராமநாதனும் அனுப்பிய வகுப்புவாரி பிரதிநிதித்துவ தீர்மானத்தை காஞ்சீபுரம் மகாநாட்டுத் தலைவர் மகாநாட்டில் பிரேரேபிக்கக்கூட அனுமதிக்காமல் சட்டர்தின் பொய்யைச்சொல்லி தள்ளிவிட்டதினாலேயே மேற் கூறியவர்கள் வெளியேறினார்கள் என்பது—மேற்படி மகாநாட்டிற்குப் பிறகும் ஸ்ரீமான்கள் கல்யாணசுந்தர முதலியார், வரதராஜுலு நாயுடு ஆகியவர்கள் அவ்வகுப்புவாரி உரிமைக்கு விரோதமாய் பிரசாரம் செய்ததும் சில இடங்களில் ஆதரித்ததும் ஆகிய காரியங்களும் நேயர்களுக்குத் தெரியும். கடைசியாக கோவை மகாநாட்டில் வகுப்புவாரி உரிமையை அடிப்படையாகக் கொண்ட காங்கிரசுக்கு நம்மை அழைத்ததும், தென் இந்திய நலவுரிமைச் சங்கத்தை ஏற்றுக்கொண்டதும் வாசகர்களுக்குத் தெரிந்ததே.

இப்போது வகுப்பு வாரி பிரதிநிதித்துவத்திற்கு ஒரு புது ஆதரவு. அதாவது நமது நாட்டிற்கு வகுப்புவாரி பிரதிநிதித்துவம் கொடுக்கப்பட்டால், எங்கே வகுப்பார்த்தங்களுக்கு ஆபத்து என்பதாகக் கருதி இவ்வளவு திருவிளையாடல்களைச் செய்து வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்கிறார்களோ அந்த வகுப்பில் முக்கியமானவரும், ஒரு ஜில்லா காங்கிரஸ் கமிட்டிக்கு தலைவரானவரும், சுயராஜ்யக்கட்சி உபதலைவரும் ஸ்ரீமான் எ. ரங்கசாமி அய்யங்கார் சமமந்திரியுமான ஸ்ரீமான் கோவை சி. வி. வெங்கிட்டரமணய்யங்கார் அந்தக்கொள்கையை ஒப்புக்கொண்டு "வகுப்பு வாதத்தை ஒழிப்பதற்கு யோசனை" என்கிற தலைப்பில் வகுப்பு வாரி பிரதிநிதித்துவ திட்டம் கூட ஏற்பாடு செய்துவிட்டார். அதாவது ஸ்ரீமான் சி. வி. வெங்கிட்டரமணய்யங்கார் 16-7-27 தேதி "சுதேசமித்திரன்" பத்திரிகையில் ஒரு நிருபருக்குப்பேட்டி கொடுத்தார் என்கிற முறையில் "இந்த ஜில்லா வாசிகளுடைய அபிப்ராயத்தையும், அபிலாஷைகளையும நான் அறிவேன். அவர்கள் அபிப்பிராயங்களை நான் தெரிந்துகொண்டிருக்கிறேன்" என்று சொல்லிவிட்டு அதை ஒருவாறு சுருக்கி கூறுகிறார். "சட்டசபை போன்ற பொது ஸ்தாபனங்கள் விஷயத்திலும், உத்தியோக விஷயத்திலும் தான் சங்கடம் இருந்து வருகிறது" என்று சொல்லிவிட்டு அதற்கு மார்க்கம் சொல்லுகிறார். அதாவது:—சட்டசபை முதலிய சம்பளம் இல்லாத கௌரவஸ்தானங்களில் 100க்கு 16½ ஸ்தானங்கள் பார்ப்பனர்களுக்கும், மீதி 83½யில் கிருஸ்தவர்களுக்கு 16½யும் மகமதியர்களுக்கு 16½யும் தாழ்த்த வகுப்பு பிரதிநிதிகளுக்கு 16½யும் பார்ப்பனரல்லாதவர்களுக்கு 33ம் என் குறிப்பிட்டிருக்கிறார்:—

உத்தியோக விஷயத்தில் புதிதாக செய்யப்படும் உத்தியோக நியமனங்களில் 100க்கு 40 பார்ப்பனரல்லாத இந்து மக்களுக்கு என்றும், 100க்கு 20 பார்ப்பனர்களுக்கு என்றும், 100க்கு 20 முகம்மதியர்களுக்கும, 100க்கு 10 கிருஸ்தவர்களுக்கும, 100க்கு 10 ஆதிதிராவிடர்களுக்கு என்றும் எழுதி இருக்கிறார். வகுப்புவாரி பிரதிநிதித்துவம் வேண்டுமென்று சொன்னவர்களுக்கு இதன் பரிமாறத்தில் திட்டத்தில் ஏதாவது வித்தியாசமிருந்தாலும் முக்கிய கொள்கையில் யாதொரு மாறுபாட்டையும காணோம். எனவே பார்ப்பனர்களும் ஒருவாறு வகுப்புவாரி திட்டம் ஏற்படுத்த ஒப்புக்கொண்டு வருகிறார்கள் என்பது இப்போது வெளிப்படை. இன்னமும் எத்தனையோ பார்ப்பனர்களும பார்ப்பனவாலிபர்களும் நம்முடன் நேரிலேயே சொல்லி இருக்கிறார்கள். அதாவது "பார்ப்பனர் பிறவிகாரணமாய் ஜாதியில் மற்ற எவரையும்விட உயர்ந்தவனல்ல என்பதையும, இந்திய மக்களின் ஒற்றுமைக்கும் கதி மோக்ஷத்திற்கும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவமே சிறந்த சாதனம் என்பதையும் ஒப்புக்கொள்ளுகிறோம். எங்களையும் தங்கள் சுயமரியாதை சங்கத்தில் சேர்த்துக்கொள்ள வேண்டும்." என்று கேட்டிருக்கிறார்கள். நமக்கு இன்னமும் அவர்களிடம் நம்பிக்கை வராததால் நாம் நமது காலிலேயே நின்று நமது தேவையை அடைய வேண்டும் என்கிற ஆசையாலும், இதற்கு முன் பலதடவைகளில் இளமயிப இதுபோன்ற பிரயத்தனங்களை இதேபார்ப்பனக்கூட்டத்தார் கூட இருந்தே கெடுத்திருக்கிறதைபார்த்து இருப்பதினாலேயும, நமக்கு அவர்களிடம நம்பிக்கைஉண்டாவது கஷ்டமாயிருக்கிறதே ஒழிய வேறில்லை. எப்படியும இதிலிருந்து வகுப்புவாரி பிரதிநிதித்துவக் கொள்கையுடைய பார்ப்பன எதிரிகள் குறைந்து வருகிறார்கள் என்கிற விஷயத்தில் நமக்கு சந்தோஷம். ஆனால் பார்ப்பனர்கள் யோக்கியர்கள் என்பதை காட்டிக்கொள்ள இப்படிச் சொல்லிவிட்டு பார்ப்பனரல்லாதாரில் மறுபடியும் சிலரை சிருஷ்டித்து கலகம செய்யச் செய்வார்கள் என்கிற பயமும் நமக்கு உண்டு. ஆனாலும் அதையும் ஒ கைபார்க்க எல்லாம் வல்ல இறைவன் நமக்கு வலிமை அளிப்பாராக. கடைசியாய் வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தைப்பற்றி பச்சைப்பார்ப்பனப்பத்திரிகையாகிய "இந்துப்" பத்திரிகை சொல்லியிருப்பதையும் குறிப்பிட்டுவிட்டு இதை முடித்துவிடுகிறோம்.

"இந்து" பத்திரிகை எழுதியதாவது:—

"வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் ஜனங்களிடை சுயமதிப்பை உண்டுபண்ணியிருக்கிறதென்பதையும், சமுதாய முன்னேற்றத்துக்குக் காரணமாயிருக்கின்றதென்பதையும, ராஜீயவாழ்வில் அலட்சியமாயிருந்த வகுப்பினருக்கு ராஜீய அறிவு புகட்டுவதற்கான வசதிகளை அது உண்டுபண்ணியிருக்கிறதென்பதையும் யாவரும் மறுக்கமுடியாது" என்று எழுதியிருக்கிறது. இதைப்பார்த்த பின்பாவது பார்ப்பனரல்லாதாருக்குள் வகுப்புவாரி பிரதிநிதித்துவத்திற்கு கண்ணியமான எதிரிகள் இருக்கமாட்டார்களென்று நினைக்கிறோம.

---

### முக்கிய குறிப்பு.

---

இதற்குமுன் வெளிவந்த "குடியரசு" இதழ்களில் "சந்தா நேயர்களுக்கு ஒரு அறிவிப்பு" என்பதாக ஒரு எச்சரிக்கை பிரசுரித்து வந்தோம். தமிழ் நாட்டில் "குடியரசுக்கு" செல்வாக்கிருப்பதினால் வயிற்றுப் பிழைப்புக்கு யோக்கியமான மார்க்கமில்லாதவர்கள் "குடி அரசி"ன் பெயரைச் சொல்லிக்கொண்டும், தமிழ் நாட்டில் தாங்கள் போகுமிடங்களிலெல்லாம் தாங்கள் "குடி அரசு" ஏஜண்டு என்பதாகச் சொல்லியும் பாமர மக்களை ஏமாற்றி சந்தா வசூலித்திருக்கின்றனர். இப்படி வசூலான சந்தா தொகையை பலர் நமக்கு அனுப்பாமலும், விபரம் தெரிவிக்காமலும் போய்விட்டதால் பத்திரிகையில் அதைப்பற்றி நாம் ஒரு குறிப்புபோட நேர்ந்தது.

ஆனால் மேற்படி அறிவிப்பானது சிங்கப்பூரிலிருந்து நமக்குச்சந்தாதாரர்களைச் சேர்த்து அனுப்பும் ஸ்ரீமான் ஜி. எஸ் நாயுடுகார் அவர்களும் அவரது நண்பர்களும் நமது பத்திரிகைக்காக சந்தா சேர்ப்பதை ஒரு சிறிதும் பாதிக்குமென்பதாக நாம் நினைக்கவில்லை. அவர்கள் நமது பத்திரிகைக்கு சிறந்த போஷகர்களாகவே விளங்குகிறார்களே ஒழிய வேறில்லை. அன்றியும் 'குடியரசின்" வளர்ச்சியைக் கோருகிறவர்கள் ஸ்ரீமான் நாயுடுகாருக்கும், அவர்களது நண்பர்களுக்கும் நன்றி செலுத்தவும் கடமைப்பட்டிருக்கிறார்கள். ஆகவே சிங்கப்பூர், பினாங்கு, மலாய் ஆகிய வெளிநாடுகளிலுள்ள நண்பர்கள் எமது போஷகர்களான மேற்படி கனவான்களைப்பற்றி யாதொரு சந்தேகமும் கொள்ளாது அவர்கள் மூலம் சந்தாதாரர்களாகச் சேர்ந்து பத்திரிகையை வளர்க்கக்கோருகிறோம்.

மானேஜர்

"குடி அரசு" ஈரோடு.

### அரந்தாங்கி

அரந்தாங்கி தாலூகா தினையா குடி கிராமத்திலுள்ள பிரபல மிராஸ்தாரும் ஏழைகளுக்கு பேருபகாரியுமாக இருந்து வந்த ஆர். எ. கே. கருப்பய்யா தேவர் அவர்கள் 19—7—27 தேதி பகல் 3 மணிக்கு இவ்வுலகை விட்டு உயிர்துறந்தனர் என்றறிந்து விசனிப்பதுடன் மேற்படியாருடைய குடும்பத்திற்கும் நம் அனுதாபத்தை தெரிவித்துக் கொள்ளுகிறோம்.

---

த்திற்குட்சக்காமமைத்துள்ள மகா சூக்குமமும், விசித்திரமும் ஆச்சரியகரமுமான மயாமந்திரமெனத்தகும் இப்பிரபஞ்சம் இவ்வண்ணமே சுழன்று கொண்டு மேன்மேலுக்ப்பிரயாணம் செய்வதாலென்க. ஆயின் நாம் என்ன செய்யக்கூடுமெனில் பரம் அவ்வியாதிரத்தின் சக்கரங்களுக்கு ஒருவாறு யெண்ணெயூற்றி அதை மேன்மையாய் ஓட்டச்செய்யலாம். அதற்காக எல்லோரையும், கூவியழைக்கிறது "குடியரசு." தொடரும்

# கவர்னரை வேலையினின்று நீக்க மற்றொரு தீர்மானம்.

## மலையாளக் குடியானவர்களின் கண்டனக் கூட்டம்.

### தலைவர்களின் இடிமுழக்கம்.

ஜூலை 23 தேதி கள்ளிக்கோட்டையிலுள்ள குடியானவர்களின் மாபெரும் பொதுக்கூட்டமொன்று நேற்று மாலை விக்டோரியா பொது மண்டபத்தில் கூடிற்று. "மிதவாதி" என்னும் பத்திரிகையின் ஆசிரியரான மிஸ்டர் சி. கிருஷ்ணன் பி. ஏ. பி. எல்., அவர்கள் கூட்டத்தில் தலைமைவகித்தார்கள். தலைவர் தம் முன்னுரையில் சென்னை அரசாங்கத்தின் கடுமையானதும் இரக்கமற்றதுமான செயல்களால் மலையாளக் குடியானவர்களின் நிலைமை பரிதாபகரமானதாகப் போய்விட்டதென்றும், ஆனால் மலையாளக் குடியானவர்கள் மனந்தளர்ச்சியடையக்கூடாதென்றும், இன்னும் அதிக ஊக்கத்துடனும் தளரா உணர்ச்சியுடனும் மகா தைரியத்துடனும் தங்கள் கிளர்ச்சியைப் பலப்படுத்திக்கொண்டு நடத்திப்போக முயற்சி செய்யவேண்டுமென்றும் குடியானவர்கள் மனதில் நன்கு பதியும்படி எடுத்துரைத்தார்.

பின்னர் பல தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. அவைகளில்,

### இந்த கவர்னர் எங்களுக்கு வேண்டாம்.

என்னும் மிகவும் முக்கியமான தீர்மானமாகிய லார்டு கோஷனைக் கவர்னர் வேலையினின்று நீக்க வேண்டுமென்னும் தீர்மானத்தை மிஸ்டர் கே. மாதவன் நாயர், எம். எல். சி., அவர்கள் பிரேரேபித்தார். அத் தீர்மானம் பின் வருமாறு:—

"இந்த ஜில்லாவின் பொதுஜன அபிப்பிராயத்திற்கு விரோதமாகவும், ஜனப்பிரதிநிதிகளைக் கொண்ட சென்னை சட்ட சபையின் முடிவுக்கு விரோதமாகவும், மேன்மை தங்கிய லார்டு கோஷன் துரையாகிய கவர்னர் சட்டசபையால் நிறைவேற்றப்பட்ட மலையாளக் குடிவார மசோதாவைத் தள்ளி நிராகரித்து விட்டதாலும்,

கவர்னரின் இவ்வடாத செய்கையால் இந்த ஜில்லாவில் அரசாங்கத்தின் ஆதரவில் பொறுக்க முடியாததும் சகிக்கமுடியாததுமான கொடுங்கோலாட்சி நடைபெற்று வருவதாலும்,

மலையாளக் குடியானவர்களின் விஷயத்தில் சட்ட அங்கத்தவராகிய சர். சி. பி. ராமசாமி அய்யரைத் தன்னிஷ்டம்போல் நடந்து கொள்ளும்படி கவர்னர் துரை அனுமதித்து விட்டதாகத் தோன்றுவதாலும்,

சட்ட அங்கத்தவர் மலையாள குடியானவர்கள் விஷயத்தில் தன் உத்தியோகதோரணையைப் பொறுப்பற்ற வழிகளிலும் கண்டிக்கத்தக்க வழிகளிலும் எதேச்சாதிகாரமாய் நடத்திப்போய்க் கொண்டிருப்பதாலும்,

மலையாள குடிவார மசோதா விஷயத்தில், கவர்னர் துரையவர்கள் ஜென்மிகளுக்கு ஆதரவுகொடுத்து வருகிறாரென்பதற்குப் போதிய பலமான காரணங்களிருப்பதாலும்,

இததகைய காரணங்களால், இம் மாகாண கவர்னரைத் திருப்பி அழைததுக்கொள்ள வேண்டிய ஏற்பாடுகளை உடனே செய்யவேண்டுமென்று குடியானவர்களின் இப் பொதுக் கூட்டம் மாட்சிமை தங்கிய சக்ரவர்த்தியின் அரசாங்கத்தை வெகு வினயத்துடன் கேட்டுக்கொள்ளுகிறது."

மேற்படி தீர்மானத்தைப் பிரேரேபித்துப் பேசிய மிஸ்டர் மாதவன் நாயர் அவர்கள் தம்மேதக அபிசம்பந்தத்தையும் கவனிக்காது பின்வருமாறு வீரப்போர் மொழிகளைப் பகன்றார்.

நான் எல்லாப்பொறுப்புகளையும் ஏற்று இன்று பேசுகிறேன். நம் நாடு சுயராஜ்யம் அடையும் வரையில் லார்டு கோஷனைப் போன்ற பொறுப்பற்றவர்களும் எதேச்சாதிகாரிகளுமாகிய கவர்னர்களும் சர். சி. பி. ராமசாமி அய்யரைப்போன்ற சட்ட அங்கத்தவர்களும் இருந்துகொண்டு தானிருப்பார்கள். சர். சி. பி. ராமசாமி அய்யரைப்போன்ற அவ்வளவு கேவலமானவரும் அற்பமானவரும் யோக்கியமற்றவருமான மற்றொரு இந்தியனை நாம் காணமுடியாதென்பதே என்னுடைய அபிப்பிராயம். உத்தியோகமும் அதிகாரமும் தன்கையிலிருக்கின்றதென்ற எண்ணத்தால் அகம்பாவங் கொண்டு திரியும் இவ்வய்யரைக்காணும் போது அரசாங்க உத்தியோகங்களை ஏற்றுக்கொள்ளவேண்டாமென்று நான் இங்கு கூடியிருக்கும் இளைஞர்களுக்குச் சொல்லும்படி கட்டாயப்படுத்தப்படுகிறேன். மலையாளக்குடி வார மசோதாவைக் கவர்னரைக் கொண்டு தள்ளும்படி செய்த பாதகர் சர். சி. பி. ராமசாமி அய்யரே. குடியானவர்களின் கஷ்டங்களைப் போக்குவதற்காக ஜென்மிகளையும் ஜென்மிகளின் சகாக்களையுங்கொண்ட கமிட்டி யொன்றை நியமித்திருப்பதைப் பார்க்கும் போது தன்னுடைய உத்தியோக காலத்தில் குடியானவர்களின் நன்மைக்கான யாதொரு சட்டத்தையும் செய்யாமல் பார்த்துக்கொள்ளுவதாக சட்ட அங்கத்தவர் வாக்களித்திருப்பார் போல் தோன்றுகிறது. இப்பொழுது புதிதாக ஏற்பட்டுள்ள கமிட்டியானது கோரமான துஷ்டமிருகங்களாகிய நரிகளையும், ஓநாய்களையும், புலிகளையும் கொண்ட கமிட்டியைப் போலவே தோன்றுகிறது. இத்தகைய கோரமான கமிட்டியால் ஆடுகளையும், பசுக்களையும் போன்ற குடியானவர்களின் குறைகளை விசாரித்து நியாயம் வழங்கப்பட முடியுமா? இப்பரிதாபகரமான ஜில்லாவின் ஏழைக் குடியானவர்களின் விஷயத்தில தன் இஷ்டம்போல் நடந்துகொள்ள சட்ட அங்கத்தவருக்கு கோஷன் துரை ஏன் அவ்வளவு அதிகாரத்தையும் கொடுக்கவேண்டுமென்பது எனக்கு விளங்கவில்லை. தன்னுடைய பொறுப்புகளைக் கொஞ்சங்கூட உணர்ந்துகொள்ள சக்தியற்ற கவர்னரைப் பொது ஜனங்களின் நன்மைகளையுத்தேசித்தாவது இம்மாகாணத்திலிருந்து திரும்ப அழைத்துக் கொள்ளவேண்டியது மிகவும் முக்கியமானதாயிருக்கிறது. மாட்சிமை தங்கிய சக்ரவர்த்தியின் பிரதிநிதியாகிய கவர்னர் துரை ஜென்மிகளிடத்திலும், குடியானவர்களிடத்திலும் யாதொரு பாரபட்சமின்றி நடந்து கொள்ளவேண்டியதிருக்க அவ்வாறு செய்யாது ஜென்மிகளின் கட்சிக்கு ஆட்சேபிக்கத்தக்க முறையில் ஆதரவளித்து வருவதானது எல்லோருக்கும் தெரிந்திருக்கிறது.

லார்டு கோஷன் துரையின் ஆட்சியின் அக்கிரமங்களை மலையாள ஜில்லாவாசிகள் உணர ஆரம்பித்தார்கள். ஆதலால் லார்டு கோஷன் துரையை இம்மாகாணத்திலிருந்து திருப்பியழைத்துக்கொள்ளவேண்டுமென்று மாட்சிமை தங்கிய சக்ரவர்த்திக்கு விண்ணப்பித்துக்கொள்ள வேண்டுவதைத் தவிர்த்து வேறொன்றும் செய்வதற்கில்லை யென்று நான் அபிப்பிராயப்படுகிறேன்.

மேற்படி தீர்மானத்தை ஆமோதித்த மிஸ்டர் பி. அச்சுதன் அவர்கள் லார்டு கோஷன் போன்ற கொடிய கவர்னர்கள் இம்மாகாணத்திற்கு வந்தால் தான் அவர்களுடைய கொடுங்கோன்மையால் குடியானவர்கள் தங்கள் விடுதலைப் போரை இன்னும் அதிக தீவிரமாக நடத்திப் போக சௌகரியமேற்படுமென்று சொன்னார்.


தலைவர்களின் பின்னுரைக்குப் பின்னால் இரவு 7 மணிக்கு கூட்டம் கலைந்தது. கடைசி தீர்மானம் இந்தியா மந்திரிக்கு தந்தி மூலியமாய் அனுப்பப்பட்டது.

(திராவிடன்)

## திருச்சியில் சுயமரியாதை நாடகம்.

24-7-27-தேதி இரவு திருச்சியில் ஸ்ரீமான் கி. ஆ. பெ. விஸ்வநாத பிள்ளை அவர்கள் முயற்சியால் சுயமரியாதை அல்லது மூன்று நண்பர்கள் என்னும் நாடகம் பார்ப்பனரல்லாதவாலிபர் காலேஜ் மாணவர்கள் நண்பர்களால் ஸ்ரீமான் ஈ. வெ. ராமசாமி நாயக்கர் தலைமையில் நடத்திக்காண்பிக்கப்பட்டது. அந்நாடகம் நடைபெறாமலிருக்கும்படி அவ்வூர் பார்ப்பனர்கள் சிலர் கலக்டருக்கு எழுதி அதை நிறுத்தி விடும்படி பல பிரயத்தனங்கள் செய்தும், கலக்டர் அவைகளை லக்ஷியம் செய்யாமல், அவ்வூர் சப்மேஜிஸ்ட்ரேட்டையும் சர்க்கிள் இனிஸ்பெக்டரையும் பக்கத்தில் இருந்து நடத்திக்கொடுக்கும்படி ஏற்பாடு செய்து விட்டார். கொட்டகை நிறைய அநேக பெரியோர்கள் உள்பட கூட்டம் நிறைந்திருந்தது. சரித்திரம் முழுவதும் சுயமரியாதை, விதவா விவாகம், கலப்பு விவாகம், தீண்டாமை ஒழித்தல், மதுவிலக்கல், ஆலயப்பிரவேசம், புரோகிதக் கொடுமை ஒழித்தல் ஆகிய விஷயங்களே காக்ஷியாய் இருந்தன. இடை இடையே 'குடி அரசும்' நாயக்கர் பெயரும் இகழ்வும் புகழ்வுமான காக்ஷி மிகவும் வேடிக்கையாக இருந்தன. பல பிரசங்க காக்ஷியும் இருந்தன. நாடக நடிகர்கள் புதியவர்களானதாலும், அதே தொழிலில் ஜீவிப்பவர்களல்லவானதினாலும், இன்னம் கொஞ்சம் அனுபோகம் வேண்டும் என்று சிலராவது சொல்லக்கூடுமானாலும், நாடகம் பார்த்தவர்களுக்கு ஒரு வித உணர்ச்சியும் படிப்பினையும் உண்டாயிற்று என்பதை மாத்திரம் உறுதியாகச் சொல்லலாம். அநேக கெட்ட வழக்கங்கள் மக்களுள் இருபாலருக்கும் பிடிபடுவதற்கு ஆதாரமாயிருக்கும் நம் நாட்டு தற்கால நாடகக்காரர்களும் அபிமானிகளும் தங்கள் முயற்சிகளை இத்துறைகளில் திருப்புவார்களானால் நாட்டுக்கு எவ்வளவோ நன்மை தரும்.

24-தேதி மாலையில் டவுன் ஹாலுக்கெதிரில், கவுன்சிலர் ஸ்ரீமான் நாராயணசாமி செட்டியார் தலைமையில், ஸ்ரீமான் நாயக்கர் "கோவை மகாநாடும் பார்ப்பனரல்லாதார் கடமையும்" என்பதாக ஒரு உபன்யாசம் செய்தார். [ஒரு நிருபர்.]



குடி அரசு.

ஈரோடு, பிரபவ-ஞு ஆடி 16வ

## சமூகத்தொண்டும் அரசியல் தொண்டும்.

சமூகத் தொண்டிற்கும் "அரசியல்" தொண்டிற்கும் ஒன்றுக்கொன்று சம்பந்தம் வைத்துக்கொள்வதானது சமூகத்தொண்டிற்கு பெருத்த கேடு சூழ்வதேயாகும்.

அரசியல் தொண்டு என்பதாக ஒரு தொண்டே இல்லை என்பதும், அது அவ்வளவும் புரட்டு என்பதுமே நமது அபிப்பிராயம். அப்படி ஒன்று இருப்பதாக யாராவது வாதத்தில் வெல்லலாமானாலும் அது கண்டிப்பாய் இது சமயம் நமதுநாட்டிற்குத் தேவைஇல்லாதது என்றே சொல்லுவோம்.

நம்மைப் பொருத்தவரை அரசியலின் பேரால் கூடுமானவரை உழைத்தாகிவிட்டது. கண்டது ஒன்றும் இல்லை. அயோக்கியர்களை உற்பத்தி செய்து அவர்கள் மூலம் பாமரமக்களை வஞ்சிக்கச் செய்ததே அல்லாமல் வேறில்லை.

அதைவிட்டுத்தொலைத்து சமூகத்தொண்டையே பிரமாதமாய்க் கருதி அதற்கென உழைத்தாலும் அடிக்கடி சறுக்கி அரசியல் சேற்றில் விழ வேண்டியதாக நேரிட்டு விடுகிறது. இது சகவாசதோஷமே அல்லாமல் வேறல்ல.

இனி அடியோடுஅரசியலை உதறித்தள்ளி வைத்து விட்டு, மக்களுக்கும் அதிலிருக்கும் மூட நம்பிக்கையை ஒழிப்பதை ஒரு திட்டமாகசமூகத்தொண்டில் சேர்த்து, எல்லாமக்களையும் சமூகத் தொண்டையே பிரதானமாய்க்கருதும்படி செய்வதை முக்கிய தொண்டாக வைத்துக்கொள்வதே நலமெனத்தோன்றுகிறது.

அரசியலில் உழல்வதென்பது என்றைக்கு இருந்தாலும் ஒரு நாளைக்காவது மனிதன் தன்னை அயோக்கியனுக்கிக்கொள்ளாமலும் தேசத்தையும் சமூகத்தையும் காட்டிக்கொடுக்காமலும் வாழும்படி செய்யவே முடியாது. இது நமது அனுபோகத்திற்கு சந்தேகமறத்தோன்றிவிட்டது.

சமூகத் தொண்டில் ஈடுபட விருப்பமுள்ளவர்களிடம், அரசியலில் அதைக்கண்டியபபதைத்தவி: மற்றபடி தான நேரில் கலப்பபதில்லை என்பதாக உறுதிபெற்றே அவர்களை சேர்த்துக் கொள்ளும் நிபந்தனை ஏற்படுத்தினால் தான் சமூக தொண்டு இயக்கம் நடைபெறவும் வெற்றி பெறவும் முடியுமென்றே இப்போது நினைக்கவேண்டியிருக்கிறது.

பார்ப்பனரல்லாதார் இயக்கமாகியதென் இந்திய நலவுரிமைச்சங்க இயக்கம்கூட இரண்டு பாகமாய் பிரிக்கப்பட்டால் நன்மையென்றே கருதுகிறோம். தென் இந்திய நல உரிமைச் சங்கம் என்பதாக உள்ளதில், அரசியல் கலந்த சமூகஇயல், தனி சமூகஇயல், ஆகிய இரண்டு பேருக்கும் இடமுள்ளதாக்கி, தனி சமூக இயல்காரரும் அதனுள் ஒரு உள் பிரிவாக ஒன்றை ஏற்படுத்திவிடுவது நலமென்றேதோன்றுகிறது. ஏனெனில் அரசியல் கலந்தால் எப்பேர்ப்பட்டவர்களும் நாணயக் குறைவுள்ளவர்களாகப் போய்விடுகிறார்கள்.

மகாத்மா இயக்கம்கூட எவ்வளவு புனிதமானதாகக்கருதப்பட்டும், அரசியலில்பஹிஷ்காரத்தை மாற்றி சட்டசபை உள்நுழைவை அது என்று ஏற்றதோ அன்றே சிறிதளவு இல்லாமல் எல்லோரிடமும் நாணயக்குறைவு தோன்றவழி ஏற்பட்டு விட்டது. ஆதலால் அதைப்பற்றி இனி சந்தேகப்பட வேண்டியதில்லை. தனி சமூகத் தொண்டில் ஈடுபட்டவர்கள் தங்களுக்கு இஷ்டமான ஒரு அரசியல்காரரை ஆதரிக்கலாம். ஆதரிக்க பிரசாரம் செய்யலாம் என்பதாக ஒரு கொள்கை மாத்திரம் வைத்துக் கொள்வதானால் (அதுவும் அவசியமானால் அதாவது நமது சமூகத்தொண்டுக்கு அரசியலால் தடை ஏற்படாமலிருக்கும் அளவுக்கு அனுகூலம் கிடைக்கும்போல் இருந்தால் மாத்திரம்) வைத்துக் கொள்ளலாம். நமது அபிப்பிராயத்தில் அந்த அளவு கூட மனிதனை அயோக்கியனுக்கி விடும் என்றே பயப்பட வேண்டியிருக்கிறது.

இந்த அடுத்துவரும் ஆகஸ்ட் மாதத்திய சட்டசபைக் கூட்டம் முடிந்தவுடன், வட ஆற்காடு ஜில்லாவில் கூடப்போகும் பார்ப்பனரல்லாதார் ஜில்லா மகாநாட்டில் இதைப் பற்றி தொண்டர்கள் ஒன்றுகூடி யோசிக்க வேண்டும் என்றே நினைக்கிறோம். அதாவது எந்த விதத்திலாவது சர்க்கார் சம்பந்தமான உத்தியோகம்,கவுரவ உத்தியோகம்,பட்டம், பதவி முதலியவைகள் எதுவும் இல்லாதவர்களும், இனிபெற்றுக்கொள்ளுவதில்லை என்கிற உறுதி உள்ளவர்கள் மட்டுமடங்கியதாகவே ஒரு அமைப்பை ஏற்படுத்த வேண்டும் என்பதே தான். அந்தப்படி இல்லாமல் என்னதான் வேலை செய்தாலும் பயன்பெற முடியாது. தாடி நெருப்பு பற்றி எரிகிறபோது அதில் சுருட்டுபற்றவைக்க நெருப்பு கேள்பது போல், நமது மக்களின் நிலை தாழ்ந்து கிடப்பதையும், சிறுமைப்படுவதையும், அயோக்கியர்களால் கொடுமைப் படுத்துவதையும் பற்றி கொஞ்சமும் கவலை எடுத்துக்கொள்ளாமல் இருப்பதோடு, மற்றவர்கள் யாராவது கவலை எடுத்துக் கொண்டாலும அதையும் கெடுத்து அதன் பலனையும் தங்கள் சுயநலத்திற்கு உபயோகப்படுத்திக்கொள்ளப் பார்க்கிற மக்களை வைத்துக் கொண்டு என்னதான் செய்யமுடியும் என்பது நமக்குத் தோன்றவில்லை.

ஆகையால் உண்மைத் தொண்டர்கள் இது விஷயத்தில் போதியகவலை எடுத்து, யோசித்து இதுசமயம் ஒரு முடிவுக்கு வரவேண்டியது மிகவும் அவசியம் என்பதை இப்போதே தெரியப்படுத்திக் கொள்ளுகிறோம். இதில் சேர வருகிறவர்கள் கூடுமான வரை கஷ்டம் அனுபவிக்க நேர்ந்தால் அனுபவிக்கவும், தியாகம்செய்யவும், தன்னலத்தை அடியோடு மறக்கவும் தயாராயிருக்கவேண்டும் என்பதையும் ஞாபகத்தில் வைத்துக்கொண்டு யோசிக்கவேண்டும் என்பதையும் தெரியப்படுத்திக் கொள்ளுகிறோம்.

## காங்கிரஸ் பைத்தியமும் பார்ப்பனர்களின் அக்கிரமங்களும்.

கோவை மகாநாட்டில் பார்ப்பனரல்லாதாரில்சிலர், காங்கிரஸில் சேர்ந்து அதைக்கைப்பற்றி காங்கிரசின் மூலம் பார்ப்பனர்கள் பார்ப்பனரல்லாதாருக்கு செய்துவரும் கொடுமைகளையாவது செய்யாமல் தடுக்கலாம் என்பதாக பேசின காலத்திலும் எழுதினகாலத்திலும் நாம் அதை ஒப்புக்கொள்ளாமல் ஆக்ஷேபித்து வந்தது யாவருக்கும் தெரிந்திருக்கலாம். நாம் ஆக்ஷேபித்ததாவது, காங்கிரசின் மூலம் பார்ப்பனர்கள் செய்யும் கொடுமையை நிறுத்தவேண்டியதில்லை என்கிற எண்ணங்கொண்டல்ல, மற்றென்னவென்றால், காங்கிரசை நாம் கைப்பற்றமுடியாது என்றும், காங்கிரசுக்கு நம்மில் யாராவதுபோனால் பார்ப்பனர்களுக்கே அதிக பலம் ஏற்படும் என்றும், எப்படியாவது அதற்குள்ள செல்வாக்கை யொழிக்க அதிலுள்ள அயோக்கியத்தனத்தையும், அக்கிரமத்தையும் வெளியில் இருந்துகொண்டு வெளியாக்குவதுதான் மேல் என்றும் சொன்னேம். பாமரமக்கள் எல்லோரும் இதை ஒப்புக்கொண்டார்களாயினும், படித்த கூட்டத்தாரில் பலரும் அரசியல் வாழ்வுக்காரரும் இதை ஒப்புக்கொள்ளவே இல்லை. அதற்காகவே நாம் வேண்டுமென்றே நடுநிலைமை வகித்ததோடு, நாம் சொன்னது சரியா தப்பா என்று அறிய ஒரு சந்தர்ப்பமும் கொடுக்கவேண்டுமென்று கருதியே அத்தீர்மானம் நிறைவேறவும் சம்மதித்தோம். இப்போது அது போலவே நடந்துவருகிறது. என்னவெனில், பார்ப்பனரல்லாதார் காங்கிரசில் சேரவிடாமல்தடுக்கப்பார்ப்பனர்கள் பல சூழ்ச்சிகள் செய்து வருகிறார்கள். அதாவது, திருச்சி தாலூக்கா காங்கிரஸ் கமிட்டி காரியதரிசி ஸ்ரீமான் துரைசாமி உடையார் 'காங்கிரசில் அங்கத்தினர்களைச்சேர்க்கும் இரசீது இல்லை உடனே அனுப்புங்கள். அல்லது இரசீது நானாவது அச்சடித்துக்கொள்ள அனுமதியுங்கள்' என்றுசென்னை காங்கிரஸ் கமிட்டிக்கு எழுதியிருந்தாராம். அதற்கு 'நாங்களும் உமக்கு இரசீது புஸ்தகம் அனுப்பமாட்டோம், நீயும் அச்சடித்துக்கொள்ளக்கூடாது. ஒரு கமிட்டி நியமித்திருக்கிறோம். அவர்களிடம் தேவைக்குத்தக்கபடி வாங்கிக்கொள்' என்றுஸ்ரீமான்சத்தியமூர்த்திபதில் எழுதியிருக்கிறாராம். இதன்கருத்து

என்ன? இதுவரையில் இருந்துவந்தவழக்கம பார்ப்பனரல்லாதார் காங்கிரசில்சேரஉத்தேசித்தவுடன் மாறுபடுவானேன்? தவிர கமிட்டிமெம்பர்களின்யோக்யதையைப்பற்றிசொல்லவே வேண்டியதில்லை. ஒருவர் ஸ்ரீமான் கே. வி. ரங்கசாமி அய்யங்கார் எம். எல். ஏ. ஒருவர் ஸ்ரீமான் என். சுப்பிரமணிய ஐயர் எம். எல். சி. மற்றொருவர் ஜனாப் ஷைகுமுர்த்துசா சாயபு எம். எல். ஏ. மற்றொருவர் ஸ்ரீமான் வீரப்பன், மற்றொருவர் ஸ்ரீமான் ராசுபிள்ளை. ஆகிய இவர்களில் ஸ்ரீமான் வீரப்பன் ஊரில் இல்லாதவர். ஸ்ரீமான் ராசு பிள்ளை இதைப்பற்றிய கவலையே இல்லாதவர். ஜனாப் ஷைகுமுர்த்துசா சாயபு பார்ப்பனர்களையே நம்பி அவர்கள் இஷ்டப்படி விட்டுவருபவர், மீதியுள்ளவர்கள் ஒரு ஐயங்கார் ஒரு அய்யர் கனவான்களேயாவார்கள். இவர்களுடைய தயவுபெற்றுத்தான், அதாவது இவர்களிடம் சேவையைச் சொல்லி என்பதின் ரகசியம் என்னவென்றால் யார் யார் சேருகிறார்கள் அவர்கள் பெயர் என்ன? எத்தனைபேர்? என்பதாகக்கேட்டு அவர்கள் இஷ்டப்பட்டால் எண்ணிக்கை அளவு இரசீது கொடுப்பது. இல்லாவிடில் இல்லை என்கிற கருத்துத்தான். நாம் எத்தனை அங்கத்தினர்களை சேர்த்தோமோ அத்தனை அங்கத்தினர்களை அவர்களும் சேர்த்ததாக பெயர் பண்ணி தாங்களே மெஜாரிட்டியாக இருக்கவேண்டும் என்கிற எண்ணத்தின்பேரிலேயே நிருவாகம் செய்யத்துணிந்துவிட்டார்கள். இந்த நிலையில் எப்படி நாம் கைப்பற்றமுடியுமென்பது வாசகர்களுக்கு விளங்காமல் போகாது. இது ஒருபுறமிருக்க,காங்கிரசு என்பது பார்ப்பனர்கள் வாழ்வுக்கு அவர்கள் இஷ்டப்படி நடத்த தேசத்தின் பேராலும் தேசமக்களின் முட்டாள்தனத்தின் பேராலும் ஏற்படுத்திக் கொண்ட ஒரு சுயநல ஸ்தாபனம் என்பது இப்பொழுதாவது விளங்குகிறதா? இல்லையா? என்று கேட்கிறோம்.

## கோவைத்தீர்மானமும் மந்திரிகளின் பிரசாரமும்.

கோவை மகாநாட்டுத் தீர்மானங்களின் பலன் என்னவானாலும் அதனால் நாட்டில் ஒரு பெரிய கடபுடல் ஏற்பட்டு விட்டது என்பதை யாரும் மறுக்க முடியாது. அதாவது பஞ்சாப் படுகொலையின் போது இராஜப்பிரதிநிதி அவர்களை திருப்பி அழைக்க வேண்டும், திரு ஓட்வியரைத்திருப்பி அழைத்து விட வேண்டும், திரு டயரை தண்டிக்க வேண்டும் என்பதாக நாட்டாரெல்லோரும் ஒன்றுகூடி காங்கிரசில், கான்பரன்சில் சந்து பொந்துகளில் எல்லாம் தீர்மானித்த காலங்களில், திரு இராஜப் பிரதிநிதிக்காவது, திரு ஓட்வியருக்காவது, திரு டயருக்காவது ஒரு சிறு கலக்கம் கவலையும் இல்லாமல் இத்தீர்மானங்களைப் பார்த்து சிறித்துக்கொண்டே இருந்தார்கள். ஆனால் கோயமுத்தூர் மகாநாட்டில் "உத்தியோகம் கிடைக்காமல் ஏமாந்துபோனயாரோ சிலர்" கூடி செய்தார்கள் என்று சொல்லும்படியான ஒரு திரு கவர்னர்மீது நம்பிக்கையில்லாத தீர்மானம் கவர்னரை தலையெடுக்க வொட்டாமல் இன்னம் படுக்கவைத்து விட்டது. யார் என்ன செய்தாலும பயப்பட மாட்டோம் என்று சொல்லிக்கொண்டு இருந்த மந்திரிகளை ஊர் ஊராய் சுற்றி தங்கள் சொந்தசெலவில் பிரசாரம் செய்யவும் மந்திரி உத்தியோகத்திற்கு எப்போது சாவு வரப்போகிறதோ என்று பயந்து அதிகாரங்களை இப்பொழுதே இன்ஷூர் செய்துவிட்டு உயில்சாசனம் எழுத ஆரம்பித்துவிட்டார்கள். ஒன்றுக்கும் அஞ்சோம் என்ற பார்ப்பனர்களோ, காங்கிரஸ் வாசற்படியில் வேட்டை நாய்கள் போல் காவல் காத்துக்கொண்டு வேறு யாரையும் உள்ளே விடக்கூடாது, விட்டால் நமக்கு ஆபத்து என்பதாக இரவும் பகலும் கண் விழித்துக் காவல்காத்துக்கொண்டிருக்கிறார்கள். இங்கொருகால் அங்கொருகால வைத்துக்கொண்டு ஏமாற்றிப் பிழைக்கலாம் என்று எண்ணியிருந்த அரசியல் மேதாவிகளுக்கு உள்ளதும் போய் விடும் போலிருக்கிறதே என்கிற நடுக்கம் ஏற்பட்டு விட்டது. பார்ப்பனர்கள் காங்கிரசில் பல பொய்த் தீர்மானங்களைப் போட்டு ஜனங்களையும் சர்க்காரையும் ஏமாற்றிப் பிழைக்கிறார்களே அது போல் நாமும் பொய்த் தீர்மானங்களைப் போட்டு ஜனங்களையும் சர்க்காரையும் ஏமாற்றி உத்தியோகம் சம்பாதிக்கலாம் என்று இருந்த சில பார்ப்பனரல்லாதார்களுக்கும இத்தீர்மானம் ஒருபரீக்ஷைகாலமாய் ஏற்பட்டு விட்டது.மற்றபடி சர். சி. பி. போன்ற உத்தியோகப் பார்ப்பனர்களுக்கும் ஒரு பெரிய கலக்கத்தை உண்டாக்கி விட்டது.

இந்த நிலையில், அய்யோ பாவம்! ஆகாச மந்திரிகள் பயந்து தங்கள் உத்தியோகங்களை நிலைநிறுத்த ஊர் ஊராய்ப் போய் பிரசாரம் செய்வது ஒரு அதிசயமாகுமா? ஆகாதென்றே சொல்லுவோம். அவர்கள் தங்கள் நடவடிக்கை நியாயமானது என்று நிரூபிக்க பல இடங்களில் பிரசங்கம் செய்யப் போகிறார்கள். இந்தச் சமயங்களில் நமது மக்கள் யாதொரு கலகமும் தடையும் இன்றி அமைதியாக அவர்கள் என்ன சொல்லுகிறார்கள் என்று கேட்க வேண்டும். அவர் யோக்கியதையை நிரூபிக்க நாம் சந்தர்ப்பம் கொடுத்தோம் என்கிற கௌரவம் நமக்கு இருக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டுமே அல்லாமல் அவர்களை பேசவிடாமல் தடுத்தோம் என்கிற பெயர் ஏற்படும்படி நடந்து கொள்ளக்கூடாது என்று கேட்டுக்கொள்ளுகிறோம். இதுவிஷயம் நாம் பல தடவை எழுதிவந்திருக்கிறோம். ஏனெனில் இது சமயம் நமது நாட்டு வாலிபர்களின் நடவடிக்கைகள் பெரும்பான்மைக்கும் நம்மையே பொறுப்பாளியாக்குகிறார்கள். ஆனதால் நாம் இதை எழுத நேர்ந்தது தவிர எப்படியும் இந்த மந்திரிமார்கள் நிலைத்துவிடுவார்கள் போலவே தோன்றுகிறது எப்படி என்றால், சென்ற வாரம் மந்திரிகளின் நிலையென்பதாக நாம் எழுதியிருந்த வியாசத்தின் பின்பாகம் அவ்வளவும் எறக்குறைய உண்மையாகவே நடந்து வருகிறது. பார்ப்பனரல்லாதார் கக்ஷி உட்பட ஒவ்வொரு கக்ஷியிலிருந்தும் பலரை மந்திரிகளும் சர்க்காரும் காங்கிரஸ் சுயராஜ்யக்கக்ஷி முதலியதுகளைச் சேர்ந்த பார்ப்பனர்களும் சரிசெய்து கொண்டார்கள் என்பதாகவே தெரிகிறது. தமிழ்நாட்டுக் காங்கிரஸ் கமிட்டி காரியதரிசியும், சட்டசபை காங்கிரஸ் கக்ஷி உபதலைவரும், சுயராஜ்யக்கக்ஷி காரியதரிசியும், இன்னமும் என்னென்னவோ பெருமை உடையவருமான ஸ்ரீமான் சத்தியமூர்த்தி ஐயர் அவர்களும் 4 நாளைக்குமுன் மேன்மைதங்கிய கவர்னர் வீட்டுக்கே நேராகப்போய் கவர்னருக்கு, "நீங்கள் பயப்பட வேண்டாம், மந்திரிகள் கலையாமலிருப்பதற்கு வேண்டியவேலைசெய்தாய் விட்டது." என்பதாக தைரியம் சொல்லிவிட்டு வந்தாய் விட்டதாகவே தெரியவருகிறது. ஆதலால் அதைப்பற்றி யாருக்கும் இனி சந்தேகம் வேண்டியதில்லை என்பதேநமதபிப்பிராயம்.

இனியும் எத்தனை நாளைக்கு ஏமாறுவது?

## தொழிலாளர்களும் மக்கள் கடமையும்.

நமது நாட்டுத் தொழிலாள சகோதரர்கள் விஷயத்தில் நாம் எதாவது அபிப்பிராயம் தெரிவிக்கநேர்ந்த சமயமெல்லாம் ஒரே ஒரு விஷயத்தை விடாமல் வற்புறுத்தி வந்திருக்கிறோம். அதாவது தொழிலாளிகள் என்போர்கள் அரசியல் கட்சிகளில் சேரக் கூடாது என்றும் அரசியலில் உழைக்கிறவர்கள் என்பவர்களை தொழிலாளர் சங்கத்தில் தலைவர்களாக்கிக் கொள்ளக்கூடாது என்பதைப் பற்றியும் தொழிலாளர்களுக்கு தனியாக தொழிற் கட்சி என்பதாக ஒரு கட்சி அரசியல் தத்துவத்தோடு இருக்கவேண்டும் என்றும் எவ்வளவோ தடவை வெகு அழுத்தமாக வற்புறுத்திவந்திருக்கிறோம். இவ்வலியுறுத்தலுக்கு நாகைத்தொழிலாளர் சங்கத்தரே கொஞ்சம் காது கொடுத்து வந்தனர். மற்றபடி மற்றத்தொழிலாளர்களும் தொழிலாளர்களுக்கு தலைவர்கள் என்று சொல்லிக் கொள்ளும் பல அரசியல் வாழ்வுக்காரர்களும் நம்மீது பாய்ந்து வந்தனர். ஆனால் இப்போது தொழிலாளர்கள் விஷயத்தில் மிகுதியும் அறிவுள்ளவர் என்று சொல்லும் ஸ்ரீமான் ஜோஷி முதல் கொண்டு அதையே சொல்ல ஆரம்பித்துவிட்டனர். அதாவது சென்னையில் கூடின தொழிலாளர் மகாநாட்டுத் தலைவரான ஸ்ரீஜோஷி "ஒரு அரசியல் கக்ஷியிலும் தொழிலாளர் சேரக்கூடாது" என்றார். தொழிலாள சகோதரர்களுக்கும எறக்குறைய இந்தஉணர்ச்சி தோன்றி வருகிறதையும் பார்க்கிறோம். தவிர, அரசியல் வாழ்வுக்காரரை நம்பக் கூடாது என்று நாம் அதே வேலையாகச் சொல்லி வருவதற்கு தக்கசான்று இவ்வருஷத்திய சென்னைக் கார்ப்பரேஷன் தேர்தலில் தொழிலாளர்கள் விஷயத்திலும் அரசியல் புரட்டர்கள் காட்டி விட்டார்கள். தொழிலாளர்கள் காங்கிரசில்சேரவேண்டும். தொழிலாளர்களுக்காக காங்கிரசுதான் உ-

ழைத்து வருகிறது என்று சொல்லி இதுவரை தொழிலாளர்களை ஏமாற்றி ஓட்டு வாங்கி பதவி பெற்று வந்த ஆசாமிகள் இன்றைய தினம் தொழிலாளர்களுக்கு ஒரு தொழிலாளரே பிரதிநிதியாக இருக்கிறோம் என்பதாக எண்ணி கார்ப்பரேஷன் கவுன்சிலர் ஸ்தானத்திற்கு ஒரு தொழிலாளி நின்றவுடன் அவரை ஒழிக்க காங்கிரஸ்காரர்கள் என்போர்கள் என்ன என்னவோ புரட்டுகள் எல்லாம் செய்து தொழிலாளருக்கு தனிப் பிரதிநிதித்துவம் இல்லாமல் செய்ய பார்க்கிறார்கள். என்? தொழிலாளர்கள் பெயரைச் சொல்லிக்கொண்டு இனிப் பிழைக்க முடியாமல் போய்விடுதம, முதலாளிகளை ஏமாற்றிவயிறு வளர்க்கமுடியாமல் போய்விடுமே என்கிற பயம்தான். எவ்வளவுதான் அரசியல் வாழ்வுக்காரர்களின் அயோக்கியத்தனங்களை தொழிலாளர்கள் பார்த்து அறிந்துவந்தாலும் அப்பொழுதும் சில தொழிலாளர்களுக்கு புத்தி ஏமாந்துபோவதையும் நாம் பார்த்து வந்திருக்கிறோம். இதுவரை எப்படி நடந்து வந்திருந்தாலும், இந்தத்தடவையாவது கண்டிப்பாய் அரசியல் அயோக்கியர்கள் வலையில் மாய்கையில் சிக்கி ஏமாந்து போகாமல், தொழிலாளிகளிடம் அனுதாபமுள்ள மக்கள் ஒவ்வொருவரும் தொழிலாளர்களால் நிறுத்தப்பட்ட தொழிலாள அபேக்ஷகருக்கே ஓட்டுக்கொடுக்கவேண்டுமாய் கேட்டுக்கொள்ளுகிறோம். இனியும் எத்தனை நாளைக்கு ஏமாறுவது?

---

## ஓர் மறுப்பு
## "நாயக்கர் முதல் மந்திரிக்கு உபசாரம் செய்தது"

---

'தமிழ்நாடு' பத்திரிகையில் "ஈரோடுரயில்வேஸ்டேஷனில் 'ஸ்ரீமான் ஈ. வெ. ராமசாமி நாயக்கர் முதலானவர்கள் கனம் முதல மந்திரியை வந்து சந்தித்து உபசரித்தார்கள்" என்றும் 'சுதேசமித்திரனில்' 'ஸ்ரீமான் ஈ. வெ. ராமசாமி நாயக்கர் ஈரோடு ரயில்வேஸ்டேஷனில டாக்டர் சுப்பராயனைக்கண்டு பேசினார்" என்றும் எழுதப்பட்டிருக்கிறது. இந்த இரண்டு பத்திரிகைகளும் முறையே 'மந்திரிக்கு உபசாரம்' 'மந்திரிகளின் பிரசாரம்' என்ற தலைப்புகளின் கீழ் இதை எழுதி இருக்கின்றன. எனவே இதைப் படிக்கிறவர்கள் சந்தேகப்படக்கூடும் என்ன வெனில் மந்திரி சுப்பராயன் முதலியவர்களின் அக்கிரமமான நடத்தைகளை ஆதரிப்பதற்காகவும், மேன்மை தங்கிய கவர்னர், கவர்னர் பதவிக்கு லாயக்கில்லை, ஆதலால் அவரை திருப்பி அழைத்துக்கொள்ள வேண்டுமென்று கோவை மகாநாட்டில் தீர்மானம் கொண்டுவந்த ஒருவன் அதேமந்திரிக்கு ரயிலில் உபசாரம் செய்தார் என்பதாக ஏற்படுமானால் அவருக்கு [தீர்மானம் கொண்டு வந்தவருக்கு] எவ்வளவு யோக்கியப்பொறுப்பு இருக்கும் என்பதாக ஜனங்கள் நினைக்கக்கூடும் என்பதற்காகவும், மந்திரி தனது வேலையை காப்பாற்றிக் கொள்ளும் முறையில் அவர் செய்யும் பிரசாரத்தில் நமக்கு பங்கு இருந்தது என்று பலர் நினைக்க இடமுண்டாகும் என்கிற எண்ணத்தின் பேரிலும், அந்த இரண்டு பத்திரிகைகளின் கூற்றையும் மறுக்கக்கடமைப் பட்டவனாக இருக்கிறேன். எனது நண்பர் ஸ்ரீமான் பி. டி. ராஜன் அவர்கள் தான் 26ந்தேதி மெயிலில் நீலகிரியிலிருந்து வருவதாக தந்தி கொடுத்திருந்ததால் அவரை வரவேற்க நான் ரயிலுக்குப் போயிருந்தேன். அப்போது ஸ்ரீமான் ராஜன் அவர்களும், டாக்டர் சுப்பராயன் அவர்களும் ஒரே வண்டியில் இருந்ததால் ஒருவருக்கொருவர் வந்தனம் செய்துகொண்டோம். "நீலகிரிமலையில் மழை உண்டா" என்று கேட்டேன். மந்திரி 'ஆம்' என்றார். இதேமாதிரி மந்திரி கேட்ட ஒரு கேள்விக்கு நான் 'ஆம்' என்றேன். இதற்குள் ஸ்ரீமான் ராஜனவர்களின் சாமான்கள் வண்டியிலிருந்து இறக்கப்பட்டு விட்டதால் இருவரும் டாக்டர் சுப்பராயனிடம் பயணம் சொல்லிக்கொண்டு புறப்பட்டு விட்டோம். மந்திரி இலாகா நியமனத்திற்காகவும், அவ்விலாக்காவிலுள்ள ஆவலாதிகளுக்காகவும், பலர் அந்த வண்டிக்குள்ளாகவே கூடிவிட்டார்கள். இதுதான் நடந்த விஷயம். இவற்றை திரித்து நிருபர்கள் பத்திரிகைகளுக்கு எழுதி இருப்பது சரியல்லவென்றே கண்டிக்கிறேன்.

மந்திரிகளை நான் பார்ப்பது எனது நிலைக்கு உயர்வு தாழ்வு என்றுவது கருதி நான் இம்மறுப்பை எழுதவில்லை. அவசியம் நேர்ந்தால், அல்லது நண்பர்கள் என்கிற முறையில், ஒருவரை ஒருவர் காணவும், அளவளாவவும் கடமைப்பட்டவர்களேயாவோம். ஆனால், இந்த சந்தர்ப்பத்தில் விஷமத்தனமானதலையங்கமிட்டு ஜனங்கள் தப்பர்த்தம் கொள்ளும்படி எழுதியிருப்பதால் மறுக்க நேரிட்டதற்கு வருந்துகிறேன்.

## நமது நாட்டுக்கோட்டை நகரத்து சுற்றுப்பிரயாணம்.

---

இம்மாதம் 15 தேதி இரவு ஈரோட்டிலிருந்து நாட்டுக்கோட்டை நகரத்துக்கு சுற்றுப்பிரயாணம் புறப்பட்ட நாம் 25 தேதி பகல் ஈரோடு வந்து சேர்ந்தோம். 16 தேதி காரைக்குடி, 17 தேதி சிவகங்கை 18 தேதி தேவகோட்டை, 18 தேதி இரவு பள்ளத்தூர், 19 தேதி காலை புதுவயல் 19 தேதி மாலை கண்டனூர், 20 தேதி காலை சிறுவயல், திருப்பத்தூர் 20 தேதி மாலை 21 தேதி காலை வடக்கூர், 21 தேதி மாலை நெற்குப்பம், 22 தேதி அமராவதிப்புதூர், 23 தேதி தஞ்சை, 24 தேதி திருச்சிக்கும், சென்றுவிட்டு 25 தேதி ஈரோடு சேர்ந்தோம். சுற்றுப்பிரயாணம் சரீரத்திற்கும் மனதிற்கும மிகவும் திருப்தியளித்து வந்ததென்றே சொல்லவேண்டும். போகுமிடங்களிலெல்லாம் அன்றுமலர்ந்த சுயமரியாதை புஷ்பங்களான தனவணிக வாலிபர்களின் உற்சாகமும் ஆவலும் எழுச்சியும் இதற்குமுன் எங்குங்கண்டதில்லையென்றே சொல்லுவோம். சுருக்கமாகமாக்கூற வேண்டுமானல், தனவணிகநாடு மாத்திரமல்ல, தமிழ்நாடு மாத்திரமல்ல, சென்னை மகாணமாத்திரமல்ல, இந்தியதேசமாத்திரமல்ல உலகத்திற்கே சுய மரியாதையைத் தவிர அல்லது சுய மரியாதைக்கு தவிர வேறு மதம் இல்லை வேறு கடவுள் இல்லை என்கிற தத்துவத்தை பரப்பி சுய மரியாதை தெய்வத்தை நிலைநாட்டப்போகிற ஆற்றலும் அறிவும் செல்வமும் படைத்தவர்களாக்கும் நமது தனவணிக நாட்டு வாலியக் காளைகள் என்றே சொல்லவேண்டும். அந்நாட்டு சுற்றுப்பிரயாணத்திற்கு ஆதியில் நாம் அழைக்கப்பட்ட பொழுது நமக்கு மிகுதியும் கலக்கம் ஏற்பட்டது. என்னவெனில் நமது சுயமரியாதைக்கு எதிரிகளாயுள்ள கூட்டத்தாரை பொன்னே போல் போற்றி வரும் ஒரு..............நாட்டிற்கு நாம் சுயமரியாதைபிரசாரம் செய்யப்போகிறோமே பலமான எதிர்ப்புகளுக்குத் தலை கொடுக்கத் தயாராயிருக்கவேண்டுமல்லவா என்கிறகவலையுடனேயேஒப்புக்கொண்டேன். ஆனால் அங்குசென்று அவ்விளங் காளையர்களை கண்டவுடன் சுயமரியாதைத் தத்துவம் இன்னது என்பதை நமக்கு விளக்கித் தரும் ஆற்றலுடைய காளைகளாகக்கண்டனன் என்றால் அது போழ்து நமது மகிழ்ச்சி எவ்வாறிருந்திருக்கும் என்பதை வாசகர்களே தான் உணர்ந்துகொள்ள வேண்டும். தனவணிக நாட்டில் சுயமரியாதைக்குச் சிறப்புத்தாதகாம் இல்லை கிராமம் இல்லை தெருவில்லை வீடு இல்லை என்பதோடு அங்குள்ள மரம் செடிகள் எல்லாம் சுயமரியாதைக் காற்றை வீசிக்கொண்டிருந்தன. என்றாலும் பார்ப்பன சூழ்ச்சிவாடை காட்டாத இடம் இல்லை என்பதையும் சொல்லித்தான் ஆகவேண்டும். அது விபரங்கள் மற்ற பத்திரிகைகள் வாயிலாகப் பார்த்திருக்கலாம். ஆனால் அவ்வளவு சூழ்ச்சிகளும் அந்நாட்டு மக்களுக்கு சுயமரியாதையின் அவசியத்தை நன்றாய் விளக்க உதவியதோடு சுயமரியாதைக்கு உண்மையான பாரம்பரியமான எதிரிகள் யார் என்பதையும், சுயமரியாதை பாவாவிட்டால்உள்ளுக்குள்ளாகவேயிருந்து எதிர்பிரசாரம் செய்கிறவர்கள் யார் என்பதையும் விளக்க ஒரு தக்க சந்தர்ப்பத்தையுமளித்தது. இந்த சுயமரியாதைபிரசாரத்திற்கு உதவியளித்து நம்முடன் கலந்துழைத்த கனவான்கள் பலராயினும் அவர்களில் முக்கியமானவர்கள், திருவாளர்கள் பள்ளத்தூர் திவான் பஹதூர் அ. முருகப்பசெட்டியார், எம். எல். சி. குமரன் பத்திராதிப ஸ்ரீமான் சொ. முருகப்ப செட்டியார். சு. முத்து சிவலிங்கசெட்டியார், அமராவதிதூர் ஸ்ரீமான் பி. ச சுப்பிரமணிய செட்யார், ஸ்ரீமான் சிராவயல் காசிநாதன் செட்டியார் காரைக்குடி ஸ்ரீமான் அரு. சோமசுந்தரம் செட்டியார், ஸ்ரீமான் தெ லெ அருணாசலம் செட்டியார், தேவகோட்டைஸ்ரீமான் டி வி அருணாசலம செட்டியார, ஸ்ரீமான் கிருத்திவாசகர், சிவகங்கை ஸ்ரீமான் ராமச்சந்திர படையாச்சி, திருப்பதூர் ஜனப் சுல்தான் பாக்தாத், சிறுவயல் கா. ஆச்சிரமத்தார் முதலியோர்கள் ஆவார்கள். அந்நாட்டுக்கும் மற்றும் அந்நாட்டில் நம பிரசாரத்திற்கு உதவிசெய்த கனவான்களுக்கும் மக்களின் சுயமரியாதையின் சார்பு நமது நன்றியறிதலைக்காட்டுகிறோம்.

# தனவணிகர் நாட்டில்

## நாயக்கர் வருகை

வைக்கம் வீரர் திரு. ஈ. வெ. இராமசாமி நாயக்கர் அவர்களுடைய நல்வரவானது தனவணிகர் நாட்டில் பெருங்கிளர்ச்சியைத் தோற்றுவித்திருக்கின்றது. யாண்டும் சுயமரியாதையுணர்ச்சி பரவி வருகின்றது, எங்கணும் புத்துணர்வு பொங்கித் ததும்பிப் பொலிகின்றது. பார்ப்பனரல்லாதார் பலரும் பேரூக்கத்துடன் தமது முன்னேற்றத்தை நாடுகின்றனர். சுயநலப்பார்ப்பனீயம் ஒருவாறு சாய ஆரம்பித்திருக்கின்றது.

பார்ப்பனீயத்துக்கு அடிமைப்பட்டு உறங்கிக்கிடந்த தனவணிகர் நாட்டைச் சில ஆண்டுகளாக நல்லிளைஞர்கள் தட்டியெழுப்பிச் சுயமரியாதை யுணர்வை வூட்டிக்கொண்டுவந்தனர். அக்கிளர்ச்சிக்குக் 'குமரனும்' ஆதரவு ஈந்து துணை புரிந்துவந்தது. எனவே, பார்ப்பன மாயையிலிருந்து விடுபடுதல் இன்றியமையாததென்னும் பேருணர்ச்சியானது நாடு முழுவதும் இளைஞர் பலர் உள்ளத்தே ஊறித் ததும்பிக்கொண்டிருந்தது அச்சுயமரியாதைப் பயிருக்கு அன்புநீர்பாய்ச்சிப் போற்றுவது போல் நாயக்கர் நல்வரவு மிளிர்கின்றது. இதுகாறும் இளைஞரே மிகுதியாகப் பார்ப்பனரல்லாதார் முன்னேற்றத்தில் வீறுகொண்டு நின்றனர். இதுபோழ்து பெரியோரும், பெண்டிரும் இதற்கு ஆதரவுகாட்ட முன் வந்திருப்பது மகிழ்ச்சிக்குரியதே. இவ்வாறு சுயமரியாதைப் பயிரானது செட்டிமார் நாட்டில் செழித்தோங்க ஆரம்பித்திருக்கின்றது:

நாயக்கரவருடைய அமைதியுள்ளமும், அநுபவ ஞானமும், அரிய உபதேசமும் அனைவரையும் ஆட்கொண்டுவிட்டன. நமது தீரரின் வீரவுரைகள் கேட்போரது உடல் உயிர் உளம் அனைத்தையும் ஒருங்கே ஈர்த்து உணர்வு மயமாக்குகின்றன. அன்னாரது பெருந்தன்மையும் பேரன்பும் உண்மையுணர்வும் பெரிதும் பாராட்டற் பாலனவாகும்.

நாயக்கர் வருகையைத் தனவணிகர் நாடனது முன்னர் பலமுறை பெற்றிருக்கின்றது. இவ்வருகையில் ஒரு சிறப்பியல்பு பொலிகின்றது. இது கால அன்னாரது நன்முயற்சியால் தமிழ்நாடு முழுவதும் சுயமரியாதைப் பேரொளி உதயமாகியிருக்கின்றது. பார்ப்பனமாயை யெனும் பேரிருள் நீங்கிக்கொண்டிருக்கிறது. யாண்டும் உறங்கிக்கிடந்த பார்ப்பனரல்லாதார் துயிலுணர்ந்து புத்துணர்வு பெறுகின்றனர். இந்நிலையில் தனவணிகர் நாட்டினைத் தட்டியெழுப்பும்பொருட்டு முதன் முறையாக நாயக்கரவர்கள் இப்பொழுது போந்திருக்கின்றார்கள். கார்முகில் கண்டு கூத்திடும் பசும்பயிர்போல் தனவணிகர் நாடானது அவர்களுக்கு நல்வரவு அளித்துக்கொண்டிருக்கிறது. நாயக்கர் வருகை தனவணிகர் நாட்டிற்கு மிகவும் முக்கியம் என்பது சொல்லாமலேயமையும். இமயம் முதல் குமரி வரையில் பார்ப்பனீயத்திற்கு ஒருவாறு போதரவு அளிப்போர் தனவணிகர் என்று கூறுதல், மிகையாகாது. பெருந்தியாக புத்தியுடன் தனவணிகர் பல வகை அறங்களைச் செய்கின்றனர். சமயச் சார்பில் அளவிலாத அறநிலையங்களை நடத்திவருகின்றனர். "அவ்வறத்தைத் தக்க வழியில் பயன்படுத்துதல் வேண்டும். பார்ப்பனருக்கே ஏகபோக உரிமையாக விட்டுவிடுதல் கூடாது" என்பதுதான் நாயக்கரது வேண்டுகோள். தனவணிகர் ஆண்டுதோறும் சமயவரியாகப் பார்ப்பனரிடத்திற்குக் கோடிக்கணக்கான ரூபாய்களைவரிதே கொட்டிக்கொடுத்துக் கொண்டிருக்கின்றனர் நூற்றுக்கணக்கான வழியில் போலிப்பேர்வழிகள் ஏமாற்றிப் பணம் பெற்றுச் செல்கின்றனர்.

நன்றியாகச் "செட்டிகள் சூத்திரர்" என்று இழிவுரையும் பகர்கின்றனர். இச்சுயமரியாதைபற்ற நிலையிலிருந்து நீங்கி, நாட்டிற்கு நலம் பயக்கும் வழியில்—பார்ப்பனரல்லாத ஏழை நன்மக்கள் முன்னேற்றமுறும் முறையில் அறமாற்றுதல் வேண்டும் என்பதே இதுகாலை வற்புறுத்தப்படுவது. அறம்செய்யவேண்டாமென்பார் யாருமிலர். போலி வகைகளை விடுத்துப் பயனுள்ள வகையில் ஈந்து புகழ் பெறுதல் வேண்டுமென்பதே கிளர்ச்சிக்காரர்கருத்து. ஆதலால் மூட நம்பிக்கைகளைப் பழமையென்று மயங்கிப் பார்ப்பனமாய்கையில் அகப்பட்டுப் பரிதவியாமல்; சீர்திருத்தக்கிளர்ச்சியில் ஈடுபட்டுச் சுயமரியாதையுணர்வு பெற்று சீர்திருத்தக்காரரைப் போற்றி மகிழ்தல்வேண்டும்.

நமது நாயக்கரவர்கள் தென்னாட்டின் சரித்திரத்திலேயே ஒரு புதிய இயக்கத்தைத் தோற்றுவித்திருக்கின்றார்கள். என்றுங்காணாத பேருணர்ச்சியுடன் இன்றியமையாதவேண்டற்பாலதாகிய புதியதோர் சீர்திருத்தப் பெருங்கிளர்ச்சி எழுந்து ஓங்கிக்கொண்டிருக்கின்றது. நாயக்கர் பெருமையானது தமிழக முழுவதும் பிறங்கும் என்பதற்கு இதுவே போதியசான்றாகும். அன்னாருக்குத் தமிழ் நன்மக்கள் பெரிதும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறார்கள், தமிழன்னையின் தவப்புதல்வராகிய நாயக்கரை மனமுவந்து வாயார வாழ்த்துகின்றேன். அவ்வாறே தமிழ்ப் பெருமக்களனைவரும் வாழ்த்தி மகிழ்வாராக!

தனவணிகர் நாட்டில் ஒருவாரமே தங்க நேர்ந்தபடியால் ஒரு சில முக்கியமான ஊர்களுக்கே செல்ல நேர்ந்தது. ஆங்காங்கு சிறப்பாக ஏற்பாடு செய்த நண்பர்களுக்கு நன்றி செலுத்துகின்றேன். மற்றும் பலவூர்களுக்கும் அன்பர் விரும்பி யழைத்தும காலின்மையால் அவர்களால் வரவியலவில்லை. அவ்வூர்களில் அடுத்த முறை வரவேண்டுவ ரலத்துக்கண்டு மகிழலாம் என்னும் அளவில் நண்பர்கள் அமையவேண்டுகின்றேன்.

நாயக்கரது நன்மொழிகளைக் கேட்டின்புற்ற தனவணிக நாட்டினர் அவருக்கு ஆற்றவேண்டிய நன்றி யறிதலான முதற்பெருங்கடன் அவரது பேச்சில் கேட்டவைகளை ஆராய்ந்து தெளிந்து பார்ப்பனீயத்தை புறக்கணித்து அவர் சொல்வழி நடந்து சுயமரியாதை பெற்று இன்புறவேண்டியதே. தமது நற் பிரசாரத்தால் தனவணிகர் நாட்டினுக்கு நல்லுணர்வளித்த வீரச் செம்மலுக்கு எங்கள் பெரு நன்றியுரியதாகுக. வைக்கம் வீரர் வாழ்க! என்று அரு சோமசுந்திரன் எழுதுகிறார்.

---

## காங்கிரசுக்கு அங்கத்தினர்கள் சேர்ப்பதைப்பற்றிய அறிக்கை.

(திருச்சி தாலூகா கா. கமிட்டிக் காரியதரிசிக்கு த கா. கமிட்டி காரியதரிசி திரு. எஸ். சத்தியமூர்த்தி அவர்கள் எழுதுகிறார்.)

அன்புள்ள ஐயா,

தங்கள் 13-7-27-உ கடிதம் கிடைத்தது. தாங்கள் ஏற்கனவே 10 தேதி எழுதிய கடிதம் 21 உ கிடைத்தது அன்றும் 13,14 தேதிகளிலும் காரியக்கமிட்டியாரின் கூட்டம் நடந்ததால் உங்களுக்கு உடனே பதில் எழுதமுடியாமல் போயிற்று. மேலும், அக்கூட்டத்தில் ஒவ்வொரு ஜில்லாவிலும் காங்கிரஸ் அங்கத்தினர்கள் சேர்ப்பதற்கும் பொதுவாக காங்கிரஸ் வேலையே செய்வதற்கும் தனிக்கமிட்டிகளை ஒவ்வொரு ஜில்லாவிற்கும் காரியக்கமிட்டியார் நியமித்திருக்கிறார்கள். தங்கள் ஜில்லாவிற்கு கீழ்க்கண்டவர்களை கமிட்டியாக நியமித்திருக்கிறது.

1. கே வி. ரங்கசாமி ஐயங்கார், 2. வி. ராமசாமி அய்யர், 3. மௌல்வி சையது முர்த்துஸா சாகிப், 4. பி. எம். வீரப்பன், 5. டி. வி. நாசுப்பிள்ளை.

மேற்படி கனவான்கட்கு காங்கிரஸ் அங்கத்தினர்கள் சேர்க்கவேண்டிய இரசீது புத்தகங்களை அப்போதைக்கப்போது தேவைக்குத் தக்கபடி அனுப்பப்படும். அவர்கள் மூலம் காங்கிரஸ் அங்கத்தினர்கள் சேர்ப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகள் தாங்கள் செய்துகொள்ள வேண்டும். தாங்களாக அங்கததினர்கள் சேர்க்கும் இரசீது புத்தகங்களை அச்சடித்துக்கொள்ள தங்கள் கமிட்டிக்கு அதிகாரம் கிடையாது:

(ஒப்பம்) எஸ். சத்தியமூர்த்தி,
காரியதரிசி

---

## பொள்ளாச்சி நகரபரிபாலன சபையில் வோட்டு சுதந்தரமுள்ள சகோதர சகோதரிகளே

இனிமேலாகிலும் மாயவலையில் அகப்பட்டுக்கொள்ளாமலும், பிரதிபலன் எதிர்பார்க்காமலும், முகதாக்ஷண்யம், பந்துத்வம், என்று கருதாமலும், தாமத்திற்கு கட்டுப்பட்டு ஓட்டு செய்வீர்களாகில் க்ஷேமத்தை அடைவீர்கள். பணத்திற்கு ஆசைப்பட்டு வோட்டு சுதந்தரத்தை விற்பனை செய்தால், தலையாட்டி கவுன்சிலர்களும் சேர்மெனும் ஒரு கட்சிக்கு கட்டுப்பட்டு வரிகளை ஏற்றி விடுவார்கள். அப்பீல் செய்தால் "முன்போட்டதே காயம்" என்று தலையாட்டி விடுவார்கள், அதைப்பெற்றுக் கொண்டு நீங்களும் சுவற்றினிடம் சொல்லவேண்டியதுதான என்று கோகுல ஆஸ்ரம திரு. ராம்ஜீ அவர்கள் பொள்ளாச்சி வாசிகளுக்கு எச்சரிக்கிறார்.

## காட்டுச்சிவிரியில் புரோகிதக்கொடுமை.

### நேரில்கண்ட கருமத்தின் அதிசயம்.

திண்டிவனம் தாலூகா காட்டுச்சிவிரி கிராமத்தில் 7—7—26 தேதியன்று என் நண்பரும் உறவினருமான திருவாளர் நாராயண கவுண்டர் தன் தாயாருக்கு கர்மம் செய்த இடத்திற்கு நான் செல்ல வேண்டியதாயிற்று. அவ்விடம் புரோகிதத்திற்கு வந்த பார்ப்பனர் செய்த அக்கிரமமாவது:— 8 முழம் ஜோடி அங்கவஸ்திரத்தை சதுரமாய் மடித்து, அதை பூமியில் பரப்பி, அதில் ஐந்து இடத்தில் அரிசி வைத்து, நூலால் சுற்றிய மண்கலயம் ஐந்தை ஐந்திடத்திலும் வைத்தார். அதற்கு தக்ஷிணை தாம் பூலம் பார்ப்பனர் இஷ்டப்படி வைக்கச் சொன்னார். அவ்விதம் வைத்த பிறகு அங்கிருந்த சுள்ளி விறகை அடுக்கி மொணமொண வென்று ஹோமம் செய்தார். சொல்லியமந்திரம் ஈஸ்வரனுக்குத்தான் ஆற்புதம். பிறகு ஓமம் செய்த அக்கினியையும் வேஷ்டியுடன் கூடிய மண்கலயத்தையும் தன்னையும் மூன்று தரம் சுற்றி வரும்படி சொன்னார். கர்த்தாவும் சகோதரர்களும் அவ்வாறே செய்து பார்ப்பனர் காலில் விழுந்து நமஸ்காரமும் செய்தார். தன் இஷ்டப்படி தக்ஷிணையும் அரிசி முதலிய சாமானுமில்லை என்ற காரணத்தை முன்னிட்டு "நீ நாசமாகப் போவது" என்று ஆசீர்வதித்தார். இத்துடன் கர்மம் முடிந்துவிட்டது என்று சொல்லி தக்ஷிணை முதலியவைகளை எடுத்துக்கொண்டு போய்விட்டார். இவ்வித அசப்பாவிதங்கள் நம்நாட்டைவிட்டு என்நாள் தொலையுமோ அந்நாளே நன்னாளென எதிர்பார்க்கின்றேன் என்று முத்துமாரி கவுண்டர் எழுதுகிறார்.

## லா (ஜெனரல்) டிபார்ட்மெண்ட். விளம்பரம்

### போர்ட் ஸெயிண்ட் ஜார்ஜ், 1927-௵ மே மாதம் 30 தேதி சமாசார பத்திரிகைகளுக்கு அனுப்பும் அறிக்கை.

செ. 382—பவர் ஆவ் அட்டர்னி என்னும் வகாலத்துநாமாவானது துருக்கி தேசத்து நீதி விசாரணை அதிகாரிகளால் சட்ட சம்மதமாயிருப்பதாகக் கொள்ளப்படுவதற்கு அதைப் பப்ளிக் நோடரி என்னும் உத்தியோகஸ்தர் தயார் செய்து துருக்கிய கான்ஸலேட் என்னும் ஆபிஸில் சட்ட சம்மதமானதாய்ச் செய்யவேண்டுமென்றாவது, துருக்கிய ரிபப்ளிக் என்னும் குடியரசைச் சேர்ந்த கான்ஸலேட்டுகளே அதைத் தயார் செய்ய வேண்டுமென்றாவது அந்த ரிபப்ளிக்கச் சேர்ந்த (எம்பஸியிடமிருந்து) ஸ்தானாதிபதியிடமிருந்து சமாசாரம் வந்திருக்கிறது. அம்மாதிரியே, யாதொரு துருக்கி நியாயசபையாரிடம் காட்டவேண்டியிருக்கும் ஒவ்வொரு தஸ்தவேஜுடனும்ஷெ ரிபப்ளிக்கைச்சேர்ந்த கான்ஸலேட்டுகளாலாவது துருக்கியிலுள்ள பப்ளிக் நோடரிகளாலாவது செய்யப்பட்ட மொழி பெயர்ப்பு ஒன்றைச் சேர்க்கவேண்டும்.

டி. ராகவய்யா,
கவர்ன்மெண்ட் ஸெக்ரெடரி.

## கோயமுத்தூர் ஜில்லா குடியானவர் சங்கம்.

நம் ஜில்லாவின் குடியானவர்கள் பாதுகாப்புக்காக ஷெ பேரையுடைய சங்கம் ஒன்று நம் ஜில்லாப் பிரமுகர்களின் முயற்சியால் கோயமுத்தூரில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது.

ஷெ சங்கத்திற்கு தலைவர் உபதலைவர்களாக முறையே திருவாளர்கள் பழைய கோட்டை பட்டக்காரர்கார் ராவ்பகதூர் நல்லதம்பி சர்க்கரைமன்றாடியார் அவர்களும், டி. எ. ராமலிங்கம் செட்டியார் அவர்களும், காரியதரிசி உதவிகாரியதரிசிகளாக முறையே திருவாளர்கள் வி. சி. வெள்ளியங்கிரிக் கவுண்டர், ஆர். கே. ஷண்முகம் செட்டியார் அவர்களும், காரியக்கமிட்டி மெம்பர்களாக திரு. ராவ் பகதூர் ராமலிங்கம் செட்டியார், திரு. ராவ் பகதூர் சி. எஸ். இரத்தினசபாதி முதலியார், திரு சி. வி. வெங்கிட்டரமண அய்யங்கார், திரு. எஸ். வேலுஉடையாக் கவுண்டர் முதலியவர்களும் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள்.

அங்கத்தினர்கள் தாங்கள் செலுத்தும் கந்தாயத்தின் பேரில் முதல 500 ரூபாய்க்கு 100-க்கு 1 ரூபாய் வீதமும் அதற்கு மேல் 100-க்கு 2 ரூபாய் வீதமும் வருஷாவருஷம்சந்தா செலுத்தவேண்டியது என்பது முதலான பல நிபந்தனைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இந்த முயற்சியானது மிகவும் போற்றத்தக்கதும் அதன் கொள்கைகள் மிகுதியும் குடியானவர்களுக்கு பயன்படத்தக்கது என்பதும் நமது அபிப்பிராயம். இதை ஆரம்பித்தகனவான்களும இதின் நிர்வாக சபைக்கு தெரிந்தெடுக்கப்பட்டிருக்கும் கனவான்களும் அநேகமாக இந்த ஜில்லாவில் முக்கியஸ்தர்களும் பொது நன்மைக்கு உழைப்பவர்களுமானவர்கள். எனினும் ஷெ சங்கமானது சட்டசபை, மந்திரி சபை, ஜில்லா போர்டு, தாலூகா போர்டு முதலிய ஸ்தானங்களுக்கு ஓட்டு சேகரிக்க உபயோகப்படுத்தப்படாமல், உண்மையிலேயே இந்த ஜில்லா குடியானவர்களின் பாதுகாப்புக்கும் நன்மைக்குமாகவே உபயோகப்படும்படி எல்லாம் வல்ல இறைவன் அருள் புரிவாராக.

சங்கத்தின் விதி முதலிய மற்ற விபரங்கள் அறிய விரும்புவோர் காரியதரிசியவர்களுக்கு எழுதித்தெரிந்து கொள்ளலாம்.

## மதிப்புரை.

நமது பார்வைக்கு "அறிவு விளக்கம்" என்னும் ஒரு மாதாந்தர பத்திரிகை கிடைக்கப் பெற்றோம். அப்பத்திரிகையானது சிறிய அளவில் அரும் பெரும் விஷயங்களை யடக்கி தன் பெயருக்கேற்பு மக்களுக்குள்ள அறிவை விளக்கி ஒழுகச்செய்யும் ஓர் இன்றியமையாத பத்திரிகை. இதை ஒவ்வொரு தமிழ்மக்களும் ஆதரிக்கத்தக்கதென நாம் அபிப்பிராயப்படுகிறோம்.

இது எல்லோரும் எளிதில் வாங்கி வாசிக்கும்படி இதன் வருட சந்தா தபால் கூலியுள்பட ரூ. 0—6—0 தனிப்பிரதி 0—0—6 கிடைக்குமிடம்.

திருவாளர் அ. கிருஷ்ணசாமி பிள்ளை
பத்திராதிபர்
உடுமலைபேட்டை.

## திருவண்ணாமலை கோயிற்பிரவேச வழக்கு நிதிக்கணக்கு.

ஷெ நிதிக்கு திருவளர் சோலை சோ. முத்துக்குமார பிள்ளையால் வசூலிக்கப்பட்ட ரூபாய் 9—8—0 வரபெற்று ஷெ ரூபாய் ஒன்பதரையும் மதராஸ் திருவாளர் என். தண்டபாணி பிள்ளை அவர்களுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது.

நிதி உதவியவர்களின் ஜாபிதா.

திருவாளர்கள்

| | |
|---|---|
| திருவளர் சோலை | ரூ. அ. ப. |
| எஸ். முத்துக்குமார பிள்ளை | 1—0—0 |
| சர்க்கார்பாளையம் | |
| டி. கோபால்சாமி நாயுடு | 2—0—0 |
| பி. கோபால்சாமி நாயுடு | 0—8—0 |
| பொன்னுசாமி சேப்பிள்ளையார் | 0—4—0 |
| ஆறுமுகம பிள்ளை | 0—8—0 |
| பி நாராயணசாமி நாயுடு | 0—8—0 |
| நடேச சேப்பிள்ளையார் | 0—4—0 |
| பெரியசாமி சேப்பிள்ளையார் | 0—6—0 |
| பரமசிவ சேப்பிள்ளையார் | 1—0—0 |
| கன்னைய சேப்பிள்ளையார் | 0—8—0 |
| ராமமேஸ்திரி | 0—4—0 |
| டி. ராஜகோபால் நாயுடு | 0—4—0 |
| பி. கோவிந்தராஜுலு நாயுடு | 0—2—0 |
| எஸ். நாராயணசாமி நாயுடு | 0—2—0 |
| டி. முன்சிபு துரைசாமி நாயுடு | 1—0—0 |
| பி. தீனதயாளு நாயுடு | 0—4—0 |
| கடம்பை, சுப்பய்ய நாயுடு | 0—8—0 |
| சில்லரை வசூல் | 0—2—0 |
| | 9—8—0 |

விவகாரம் பெருத்த செலவில் நடத்த வேண்டிய நிலைமையில் ஏற்பட்டு விட்டதால் கனவான்கள் தங்களால் கூடியதை இது சமயம் உதவக்கோருகிறோம். ப—ர்.

## திருநெல்வேலி ஜில்லா 6-வது மகாநாடு.

ஷெ மகாநாடு நாளது ஜுலை மாதம் 31 தேதி திருநெல்வேலியில் "மனோரமா நாடக சாலை"யில் கூடும். அதுசமயம், வங்காள ராஜீயக்கைதிகள், மதராஸ் சட்டசபையில் சுயராஜியக்கக்ஷியாரின் நிலை, ராயல் கமிஷனும் நம் நோக்கமும் ஆகியவை போன்ற விஷயங்கள் விவாதிக்கப்பட்டு தீர்மானிக்கப்படும். ஆனதால் எல்லா தேசபக்தர்களையும் விஜயம செய்யும்படி வரவேற்புக் கமிட்டித்தலைவர் கேட்டுக்கொள்ளுகிறார்.

ஸ்ரீமத் இராமலிங்க ஸ்வாமிகள் 2-வது மகேஸ்வர பூஜை. பிரபவ ஆண்டு ஆடி தங்கள் 20ஆம் நாள் மாயவரம் சன்மார்க்க சங்கத்தில் நடைபெறும். அன்று ஸ்வாமிகளின் படத்தை திருவீதியில் திருவுலாக் காக்ஷி நடத்தவும், அடியார்க்கு அன்னமளிக்கவும், திருவருட்பா பாராயணம் செய்விக்கவும், அன்பர்கள் உதவிபுரியவேண்டுமென்று ஷெ சன்மார்க்க சங்கத்தார் கேட்டுக்கொள்ளுகிறார்கள்.

அறிக்கை:— என் குருநாதர் ஹரித்துவாரம் மங்களபுரி பாலாஜி பெரிய யோகி மகான் காலேர்த்தலேமுறையாய்க் கையாண்டு வந்து இம்முறையை நான் இருபது வருஷம் தொண்டு செய்து அறிந்து கொண்டு சாதுக்கள் அகாடாவை விட்டு பழனிக்கு வந்து அநேக கொடிய ரோகஸ்தர்களுக்குக் கொடுத்து குணம் செய்ததற்குள்ள நற்சாட்சிகள் பலவுள. பக்தர், பிரபுக்கள் வேண்டுகோளுக்கிணங்கி குறைந்த விலைக்கு வெளியிடப்பட்டிருக்கின்றன பலவித குஷ்ட ரோகங்களுக்கும் இன்னும் அநேகம் ரோகங்களுக்கும் ஏற்பட்ட அனுபானத்துடன் கொடுத்துக் கைகண்டது, பல சிகோதர்ஷண ஸ்திரிக்கும் ஆண் பெண் இருபாலரும் எந்த வயதாகயிருந்தாலும் சாப்பிடசரியாய் அமைக்கப்பட்டது. அபார சக்தி வாய்ந்தது. வாந்தி முதலிய எவ்விதக்கெடுதலும் செய்யாதது.



# தாம்பர பற்பம்.

தீரும் வியாதிகள் — கருங்குஷ்டம், செங்குஷ்டம், வெண்குஷ்டம், சொறி குஷ்டம், பொரி குஷ்டம், விரிகுஷ்டம், எரி குஷ்டம் கபாலகுஷ்டம், குறை நோய், சில்லட்டைக்கடி, கடி விஷங்கள் 8-ம் கிராம்பல், பெருவயிறு, மகோதரம், நீர்க்கவைசை, குன்மம், அண்டவாய்வு ஆனைக்கால், சூலே, திமிர், மதமதப்பு, உள்ளங்கை, உள்ளங்கால் எரிச்சல்கள், திரேகம் அழுகி துர்நாற்ற முடையவர்கள், ஆணிப்புண்கள், குழிப்புண், கிராணி, கண்டமாலை, பவுத்திரம் இன்னும் அநேக கொடியரோகங்களைசீக்கிரத்தில 5, 10, 21-வேளைகளில் குணப்படுத்தும்.

| | | | |
|---|---|---|---|
| விலை விபரம் | முதல் செ. தாம்பரபற்பம அனுபான சூர்ணத்துடன் 21-நாள் விலை ரூ. 30 | | (தபால் பிரத்தியேகம்) |
| | ” ” ” ” 10-நாள் விலை ரூ. 15 | | |
| | 2-ம் செ. ” ” ” 40-நாள் விலை ரூ. 40 | | |

1. நற்சாட்சி:—பினெந்து பிரை[Prey] யிலிருக்கும் சி. வி. சோமஸ் என்பவர் மருந்து சாப்பிட்ட அனுபோகத்தைச் சொல்லுகிறதைக் கவனியுங்கள்:—

ஐயா, எனக்கு நீங்கள் அனுப்பியமுதல் நம்பர்தாம்பிர பற்பத்தை நான் 5நாள் சாப்பிட்டேன் கருமேக நீர் சம்பந்தமான சகல ரோகங்களும் நீங்கி சுகமாகி விட்டது. இனியும் பாக்கி மருந்து கைவசமிருக்கிறது. கஷ்டப் படுகிறவர்களை சௌக்கியப்படுத்தி ரக்ஷிக்கும் பொருட்டு கடவுள் உங்களை அவதார ரூபமாக ஏற்படுத்தியிருக்கிறார் என்பதற்கு நான் உறுதியாய் நம்பிக் கொள்ளுகிறேன். 16-2-27. சி. வி. தோமஸ்,

என் பேருக்கு தாங்களனுப்பிய தாம்பிர பஸ்பமானது மிகவும் அருமையானதும் அற்புதமானதுமான வேலை செய்திருக்கிறது: எப்படி யெனில்:— ஓர் எளிய ஸ்திரிக்கு காலில் முழங்காலுக்குக் கீழ் நுரைக்காயைப் போல் மேகவியாதி கால் பாதமிரண்டும் வீக்கம், இதற்காக நானும் சிலரும் சேர்ந்து பணம் வசூலித்து டை பஸ்பத்தின் வி. பி. யை வாங்குவதற்காக தயார் செய்து பார்சல் எங்களுக்குக் கிடைத்த அன்றைதினமே கொடுத்து இரண்டு தினம் நாலுவேளையில் காய்காயாக இருந்தது வற்றவும். பாதவீக்கமாக இருந்தது வடியவும், ஆரம்பித்து 5-நாள் 10-வேளை மருந்தில் முற்றிலும் உதிர்ந்து வீக்கமும் வாங்கி விட்டது. அநேகருக்கு மிகுந்த ஆச்சரியம் உண்டாகி விட்டது.

6-2-25 (Sd) T. A. பிள்ளை, மூர்ரோட்டு பெங்களூர் டவுன்.

விபரமான கேட்லாக்குக்கு எழுதுங்கள்.

வெளிநாட்டில் உள்ள நண்பர்கள் மருந்துக்கு ஆர்டர் செய்யும் போது முன் பணம் ரூ. 5 அனுப்பவேண்டும்.

## ஸ்ரீமத் சற்குரு மகாதேவ ஸ்வாமிகள்,

சுதானந்த வேடிகல்ஹால், பழனி மதுரை ஜில்லா, தென்னிந்தியா.

தந்தி விலாசம்: ‘சற்குரு பழனி’

நமது சோல் எஜண்டு { M. E. நாயுடு அவர்கள், டிரஸ்ஸர் 86 டேலுக்கெடாங்கு ரோட்டு. கிளாங்கு—Klang F. M. S.

13-ம் வருடம பிறந்து விட்டது. 13-ம் வருடம் பிறந்து விட்டது.

# “ஆனந்தபோதினி”.

ஓர் உயர்தர தமிழ் மாதப் பத்திரிகை.

48-பக்கங்களில் உயர்ந்த விஷயங்களுடன் வெளிவருவது.

தமிழ் நாட்டில் உள்ள மாத சஞ்சிகைகளில் முதன்மை பெற்றது.

15 வருடங்களாக நடைபெற்றுவருவது.

20,000 சந்தாதாரர்களையுடையது. எல்லோரும் படிக்கத்தக்கது

இந்தியா, பர்மா, சிலோன் ஆகிய உள்நாடுகளுக்கு வருட சந்தா ரூ. 1—0—0

பினாங்கு, சிங்கப்பூர், நெட்டால் முதலிய வெளி நாடுகளுக்கு

வருட சந்தா ரூபாய் 1—4—0 மாதிரிக் காப்பி இனம்.

விலாசம்: ஆனந்தபோதினி ஆபீஸ்,

கெ. 6, வெங்கடேச மேஸ்திரி தெரு. மதராஸ்

## கொள்ளேகாலம் சர்க்கில் தேவஸ்தான கமிட்டி.

கொள்ளேகாலம் சர்க்கிள் தேவஸ்தான கமிட்டி நாளது 14-7-27 தேதியன்று பகல் 1-மணிக்கு கொள்ளேகாலம் தாலூக்கா போர்டு ஆபிசில் தலைவர், உபதலைவர் தேர்தலுக்காககூடியது அக்கால கோவை, சேலம் ஜில்லாக்களின் தேவஸ்தான போர்டு இன்ஸ்பெக்டர் திரு. J. M. சோமசுந்தரம் பிள்ளை B.A., B.L. அவர்கள் இனிமேல்கமிட்டியார் செய்யவேண்டிய வேலைகளைப்பற்றி விபரமாக எடுத்துரைத்தார்கள், திருவாளர்கள் ஜி. பி. லிங்கய்யா, ஜி. இராமச்சந்திர அய்யர் அவர்கள முறையே தலைவர், உப தலைவர்களாக ஏகமனதாக தெரிந்தெடுக்கப்படலாயினர்.

## ஈரோடு சர்க்கில் தேவஸ்தான கமிட்டி.

ஈரோடு சர்க்கிள் தேவஸ்தான கமிட்டியானது 12-7-27 பிற்பகல் 2 மணிக்கு கமிட்டி கட்டிடத்தில் அதன் தலைவர். உபதலைவர் தேர்தலுக்காகக்கூடியது. அது சமயம். சென்னை தேவஸ்தான போர்டு இன்ஸ்பெக்டர் திரு ஜே. எம். சோமசுந்தரம்பிள்ளை பி. எ. பி. எல் அவர்கள் கமிட்டியின் முன்னுள்ள வேலைகள் முதலியவைகளைப்பற்றி சுருக்கமாகக்கூறினார்கள். அதன்பின் திருவாளர்கள் இரவப்பறதூர் என். நல்லதம்பி சர்க்கரை மன்றாடியர் அவர்கள் ஈ. வே. இராமசாமி நாயக்கரவர்கள் முறையே தலைவர், உப தலைவராக ஏகமனதாக தெரிந்தெடுக்கப்பட்டார்கள் என்று எ. என். என். முத்துபிள்ளை தெரிவிக்கிறார்.

## கோவையில் கனம் டாக்டர் டி. எம் நாயரின் 8-வது ஆண்டு திருவிழா.

17-7-27 மாலை ஸ்ரீசாரதா பெண்பாடசாலையில் கொண்டாடப்பட்டது. கோவை முனிசிபல் கவுன்சிலரும் ஜில்லா கல்வி சபை தலைவரும் தேவாங்க குல பிரமுகருமானவக்கீல் திரு சி. எம். ராமச்சந்திர செட்டியார் அவர்கள் தலைமையில மதுரை திரு. ராமனுதன் அவர்கள் திரு நாயரின் ஜீவிய சரித்திரத்தையும், அவர் நமது பார்ப்பனரல்லாதார் சமுகத்திற்கும், தொழிலாளிகளுக்கும், நமது ஆதிதிராவிட சகோதரர்கள் முன்னேற்றத்திற்கும் அரும்பாடுபட்டதைப் பாராட்டி சுமார் 2 மணிநேரம் பேசினார்கள். 9-மணிக்கு வந்தனம கூறப்பட்டு சபைகலைந்தது.

## “அதிவெகு ஆச்சரியம்”

ஆரூடம்:—தகுந்த விடைகள்எதிர்காலபலன் கேள்விகள் 6-க்கு ரூ ஒன்று, மேற்கொண்டு கேள்வி 1-க்கு அணா நான்கு தபால் செலவு வேறு சுப்பிரமணிய கவசத்தால் சகல காரியங்களும் அனுகூலம். சகல வசியங்களும் ஏற்படும். தரித்திரம் உண்டாகாது கவசத்து ஒன்றுக்கு ரூ. 2, தபால் செலவு வேறு, ரச விக்கிரகங்களும் ஈஸ்வரிபரக முடிந்து அனுப்பப்படும். இன்னும் வேறு விஷயங்களுக்கும் எழுதித்தெரிந்துகொள்ளவும். அன்னிய நாட்டுப்பிரதேசவாசிகள் முன் பணம் தபால் செலவும் சேர்த்து அனுப்பவேண்டும்.

வி எஸ் அய்யர், சுப்பிரமணிய உபாசி,

பழனி. Palani P. O (S. I.)

## பார்ப்பனர்களின் ஒற்றுமையும் நமது ஒற்றுமை இன்மையும். "ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு."

(சிதம்பரனார் எழுதுகிறார்)

ஒருவருக்கும் அடிமையின்றிச் சுதந்தர வாழ்க்கை பெற்று வாழ்ந்த நாம், பற்பல நாட்டினரும் கொண்டாடத்தக்க உயரிய நாகரிகம் பெற்று வாழ்ந்த நாம் இன்றைக்கு ஒற்றுமையின்றிக் கிடக்கின்றோம். ஒரு உடலில் உள்ள அவயவங்கள் அனைத்தும் நல்ல நிலையிலிருந்தால் தான் அவ்வுடல் பலராலும் பார்க்கக்கூடிய அழகிய மனித உருவாகும். அவ்வாறின்றிச் சில அவயவங்கள் குறைந்தும் சில அவயவங்கள் பருத்தும் நீண்டும் இருக்குமாயின் எங்ஙனம் அவ்வுடலுக்கு அழகுண்டாகும்? அதுபோல ஒரு தேசத்தில் உள்ள மக்கட் சமூகம் அனைத்தும் ஒரேவித நாகரீகத்தை யடைந்திருந்தால் தான் அத்தேசமும் பலரால் போற்றக்கூடிய தேசமாகும்.

ஆனால் இப்பொழுது நமது தேசமோ அவ்வாறின்றிப் பலமக்கள் தீண்டப்படாதவர்களாகவும், பார்க்கப்படாதவர்களாகவும், சமத்துவமாக உட்காரக் கூடாதவர்களாகவும், வீட்டிற்குள் வரக்கூடாதவர்களாகவும், வந்தாலும் சமத்துவமாக வைத்துச் சாப்பிடக்கூடாதவர்களாகவும் இருக்கக்கூடிய நிலையிலிருக்கின்றது. ஆனால் ஒரு சமூகத்தினர் மட்டும் அடையவேண்டிய நாகரீகத்தை யடைந்து விட்டனர். அவர்களைப் போன்ற நாகரீகத்தையடைய வேண்டுமென்று தான் நாமும் முயற்சிக்கின்றோம். இதற்கு ஏன் முன்னேற்ற மடைந்த சமூகத்தார் தடை செய்யவேண்டுமென்று கேட்கின்றோம்.

முன்னேற்றமடைந்த பார்ப்பன சமூகத்தைச் சிறிது உற்று நோக்குங்கள்? திராவிடர்களில் எப்படி செட்டியார், முதலியார், நாயக்கர், கவுண்டர், பிள்ளை, படையாச்சி உடையார், மூப்பனர், நாடார் முதலிய பிரிவுகளிருக்கின்றனவோ இவைபோலவே பார்ப்பனர்களிலும் சர்மா, ஆச்சாரி, ஐயங்கார், அய்யர், சாஸ்திரி, பட்டர், தீட்சதர், குருக்கள் முதலிய பல பெயர்களும், ஒருவர்க்கொருவர் உயர்வு தாழ்வுகளும், கோத்திர வேறுபாடுகளும், குல வேறுபாடுகளும் வைத்துக்கொண்டிருக்கின்றார்கள். ஆனால் அவர்கள் இவ்வேறுபாடுகளைப் பெண் கொள்வது கொடுப்பது முதலியவைகளில் மட்டிலும் வைத்துக்கொண்டு மற்றவைகளில் ஒன்றுபட்டுழைகின்றார்கள். உதாரணமாகச் சாப்பாட்டை எடுத்துக்கொள்வோம். பல வேறு வகைப் பார்ப்பனர்களும் பேதமின்றி ஒன்றாக உட்கார்ந்து சாப்பிடுகின்றார்கள். தங்களுக்குள் நடைபெறுகின்ற கல்யாணம் கருமாதி முதலிய சுகதுக்க காரியங்களைத் தங்கள் தங்கள் குலத்துக் குருக்களைக் கொண்டே செய்து கொள்ளுகிறார்கள். மாமிசந்தின்னும் பார்ப்பனரும், சைவப்பார்ப்பனரும், இங்கிலாந்து சென்ற பார்ப்பனரும் இந்திய பார்ப்பனரும் தங்களுக்குள் வேறுபாடு பாராட்டுவதில்லை.

ஆனால் நாமோ இன்னும் ஒற்றுமையடையாமல் நமக்குள்ளிருக்கும் வேறுபாடுகளை அதிகப்படுத்திக்கொண்டு, நம்மை எந்த வழியில் அமிழ்த்தலா மென்பதையே எப்பொழுதும் எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் பார்ப்பனர்களின் வாலைப் பிடித்துக்கொண்டே திரிகின்றோம். பார்ப்பனர் ஒரு வார்த்தை சொல்லி விட்டால் அதனைச்சிரமேற்கொண்டு சுயமரியாதையின்றி அதன் வழி நிற்கின்றோம். நம் வீட்டில் நடைபெறும் நன்மை தின்மைகளுக்கு அவர்களை யழைத்து நம் பொருளையுங் கொடுத்துச் சுயமரியாதையையும் இழக்கின்றோம். பார்ப்பனர்கள் தங்கள் ஜாதிய சீர்திருத்தத்தில் எவ்வளவு முற்போக்கடைந்திருக்கின்றார்கள் என்பதைக் கவனித்தாவது நாமும் முற்போக்கடைய முயற்சிக்கவேண்டாமா?

அந்தோ! நமது நாட்டைப்பிடித்த சனியன் இன்னும் விடவில்லைபோலும். டாக்டர் வரதராஜுலு நாயுடு அவர்களும், திரு. வி. கல்யாண சுந்தர முதலியாருங்கூட இன்னும் பார்ப்பனர்கள் தயவுக்குப்பல்லிளிப்பட என்னுவார்களானால் சாதாரணமக்களைப்பற்றி எவ்வாறு குறை கூறமுடியும்? ஆனால் சாதாரண ஜனங்களே; எப்பொழுதும் நேர்மையான வழியில் உறுதியாக நடப்பவர்கள் என்பது அறிஞர்களறிந்த அனுபவ உண்மை. ஆகவே இனியாயினும் நாம் ஒன்றுபட்டுழைப்பு முயல்வோமாக. விரைவில் சாதிவேற்றுமைகளை விட்டொழித்து யாவரும் ஒரே குலத்தினராக சகோதர சகோதரிகளாக விளங்குவோமாக.

### பேச்சிமுத்துரங்கசாமிக்கவுண்டர் தர்ம ஸ்தாபனம்.

சுமார் 20,000 ரூபாய் சிலவு செய்து சுமார் 1000 பேர்கள தங்கும மாதிரியில் கட்டியுள்ள. கட்டிடத்துக்கு திரு. எம். சம்மந்தமுதலியார் அவர்களால் திறப்புவிழா செய்யப்பட்டது. பின்பு சுமார் 500 ஏழைகளுக்கு அன்னம் அளிக்கப்பட்டது என்று கோவை சு. கந்தசாமிக் கவுண்டர் தெரிவிக்கிறார்.

### சுக்கிரவாரப்பேட்டை திருநீலகண்ட நாயனார் சபை.

மேற்படி சபையின் 2-வது ஆண்டு 17-7-27 தேதி திருவாளர் சி. கே. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் தலைமையில் நடந்தது. உள்ளத்தினயதுயர்வு, ஆத்திச்சூடி, தமிழ் மொழிச்சிறப்பு என்னும் விஷயத்தைப்பற்றி பேசினார்கள் என்று கோ. சு. கந்தசாமிக் கவுண்டர் எழுதுகிறார்.

### திரிசிரபுரம் ஸ்ரீ மலைக்கோவில் மண்டலாபிஷேக வைபவம்.

திரிசிரமலையில் வீற்றிருந்தருளும் ஸ்ரீ சுகந்த குந்தளாம்பாள் சமேத ஸ்ரீ மாத்ருபூதேஸ்வர (தாயுமான) சுவாமிக்கும் பரிவார மூர்த்திகட்கும் சென்ற வைகாசி மாதம் 31ந் தேதியன்று அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகமும் சீரும் சிறப்புமாக நடந்த விஷயம் யாவரும் அறிவர். அதன பூர்த்தியாகிய மண்டலாபிஷேகம் வரும் ஆடி மாதம் 18ந் தேதியன்று நடைபெறும் என்று தர்மகர்த்தா அரு. சு. வே. காசிவிஸ்வநாதன் செட்டியார் தெரிவிக்கிறார்.

### தனுஷ்கோடி, கஸ்டம் ஆபீஸ் அட்டூழியம்.

ஆரியரல்லாத அண்ணலீர்! நமது சகோதரர்கள் பலர் இந்தியாவிலிருந்து சிலோன் பிரயாணம் செய்வதில், தனுஷ்கோடியிலிருந்து தலைமன்னார் (சிலோன்) போகும் ஸ்டீம் லாஞ்சு (கப்பலில்) சிலோன் கஸ்டம். ஆபீசர்கள் வந்து எல்லா ஜனங்களையும் சுங்க பரிசோதனை செய்து கொண்டு அப்போதே மெயிலுக்கு பாஸ் செய்து அனுப்பிவிடுகிறார்கள். இதில் ஜனங்கள் யாதொரு தொந்திரவும் அன்றி சுகமாக அவரவர்கள் நாடிய ஊர்கட்கு போய்ச் சேருகிறார்கள்.

இதுபோல இந்தியா ஜனங்கள் சிலோனிலிருந்து திரும்ப இந்தியாவுக்கு வருங்கால் தனுஷ்கோடி ஸ்டீம லாஞ்சில் (கப்பலில்). இந்திய கஸ்டம் ஊழியர்கள் வந்து 1, 2 வகுப்பு ஜனங்களையும், இண்டர்மீடியட் வகுப்பு ஜனங்களையும் சுங்கபரிசோதனை செய்து உடனே போட்மெயிலுக்கு பாஸ் செய்து அனுப்பிவிட்டு, 3ம், வகுப்பு மெயில் டிக்கட்டுள்ள ஜனங்களில் சிலரை மட்டும் போட் மெயிலுக்கு பாஸ் செய்து அனுபிவிட்டு, மற்றவர்களுடன் கூலி ஜனங்களையும் ஒருமிக்க, வேறு (சாதாரண) புகை இரதத்தில் ஏற்றி ஸ்டேஷனுக்கருகாமையிலுள்ள கஸ்டம பரிசோதனை கட்டிடத்தில் அடைத்து பரிசோதித்து 12—1 மணி சுமாருக்கு வெளியில் விடுதலை செய்கிறார்கள. அப்பால் சாயுங்காலம் புறப்படும், இராமேஸ்வரம் எக்ஸ் பிரசில் ஏற்றிவிடுகிறார்கள்.

மெயில் 3ம, டிக்கட்டுள்ள பாசஞ்சர்களுள் சிலரை போட் மெயிலுக்கு அனுப்புவதும, மற்ற மெயில் 3ம வகுப்பு ஜனங்களை, கூலி டிக்கட்டுள்ள ஜனங்களுடன் சேர்த்து சாயுங்காலம எக்ஸ் பிரசில் அனுப்புவதுமானால், மெயில் டிக்கட்டின் மதிப்பு என்ன? இவ்விஷயம கவனிகக மேல் அதிகாரிகள் யாரும் இல்லையா?

இந்த தனுஷ்கோடியில், சிலோனிலிருந்து திரும்ப இந்தியாவுக்கு வருங்கால், இந்தியாவில பிரபலமான "மாடர்ன்" பத்திரிக்காசிரியர் ஸ்ரீமான ராமானந்தசட்டர்ஜி என்னும் கனவான் தான் அடைந்த கஷ்டத்தைத் தன், மாடர்ன் பத்திரிகையில், "இந்த ஜூலை மாதம் லெட்டர்" என மகுடம் புனைந்து வரைந்துள்ள வியாசம் கண்ணுற்றிருக்கலாம். அந்தோ! இந்த அனீத செயலகள் செய்யும் அந்தணர்களாகும கஸ்டம ஊழியர்களின் அட்டூழியத்தை எதிர்கக எவரும் வரவியலவில்லையே.

இப்பெருந்துன்பங்களை நீக்கி நமது கவர்ன்மெண்டார அவர்களும், கஸ்டம மேல் அதிகாரிகளும் நன்கு கவனித்து தாமதமின்றியில் 1, 2, 3 வகுப்ப ஜனங்களையும், இண்டர்மீடியட் வகுப்பு ஜனங்களையும் போட்மெயிலுக்கே அனுப்பி வைக்கும்படி மகாஜனங்களின் அபிப்பிராயத்திற் கிணங்கி பிரார்த்தித்து கேட்டுக்கொள்ளுகிறோம்.

அதிகாரிகளே! இந்த "மாடர்ன்" பத்திரிகாசிரியராகும் ஸ்ரீமான் ராமானந்தசட்டர்ஜீ, அவர்களே பலபாடுபட்டார் என்றால் நாம் படும் கஷ்டம் எப்படியிருக்கும் என்று கோவை சி. கே. வீரய்ய நாயக்கர் எழுதுகிறார்.



நாலு தலைமுறை பரம்பரை சமஸ்தான வைத்திய நிபுணர்! பழநி சித்தவைத்தியசங்க அமைச்சர்!! தமிழ் சித்தவைத்திய கான்பரன்ஸ்களில் முதல்தர தேவ ஔஷதங்களென முதல்தர தங்கமெடல்களும் வைத்திய ஆசிரியர் பட்டமும் பெற்றவர்!!! மூப்பு சேர்ந்த மருந்துகள்.

## பழனி. சி. எம். சாமி மகாவீரிய தங்கபஸ்பம்

பச்சிலை மூலிகையிலேயே நீற்றப்பட்டது. பெரிய மனுஷனின் முறை அபார தாது புஷ்டியும், பலமும், பசியும், ரத்தவிர்த்தியும் உண்டாக்கும் இல்வாழ்வில் அதியற்புத சுகம் தரும். வெள்ளை, வெட்டை, நீர்க்கடுப்பு, நீரழிவு பவுத்திரம், மூலம் க்ஷயம், இருமல் கபக்கட்டு குன்மம் முதலிய சகல வியாதிகளும் தீரும். 48 நாள் பஸ்பம் விலை ரூ. 20. 24 நாளைக்கு ரூ. 10.

நற்சாட்சி:—தங்கள் தங்கபஸ்பம் சாப்பிட்டதில் எனக்கிருந்த வாய்வு, வெட்டை பலக்குறைவு முதலியன நீங்கி அபார தாது புஷ்டி உண்டாயிருக்கிறது. இதன் பெருமையையெழுத முடியாது இன்னும் மேர்படி தங்கபஸ்பம் ஒரு மண்டலத்திற்கு அனுப்பவும். வி. எம். வரதராஜப் பெருமாள்சாமி கவிராயர் பொள்ளாச்சி.

## குருஅப்ரேக் செந்தூரம்-நீரழிவுக்கு

ஜாஸ்தி போகும் நீரையும், நீரிலுள்ள சர்க்கரை சத்தையும் குறைத்து தாகத்தை நிறுத்தி தேகவெளுப்பை மாற்றி ரத்தவிர்த்தியையும், தேக புஷ்டியையும், தரும். சகல மேகமும் க்ஷயரோகமும் நீங்கும். தளுக்கற்றது 24 நாள் புட்டி 1-க்கு ரூ, 15 48 நாள் புட்டி 1-க்கு ரூ. 30.

நற்சாட்சி:—நான் சிங்கப்பூரில் நீரழிவினுல் அதிக கஷ்டப்பட்டுக் கொண்டிருக்கும்போது தங்களுடைய குருஅப்ரேக் செந்தூரத்தை அனுபானத்துடன் சாப்பிட்டதில் என் வியாதி பூராவும் சொஸ்தமாயிற்று இது நீரழிவு வியாதிக்கு மிக உயர்ந்த மருந்தாய்தெரிகிறது. எனது சிநேகிதர் ஒருவருக்கு ஒரு புட்டி குருஅப்ரேக் செந்தூரமும் அனுபானமும் வி. பி. யில் அனுப்பகோருகிறேன் கா. முகம்மது அப்துல்காதர் காரைக்கால். 21—12—26.

## குருதாளகபஸ்பம்-இருமலுக்கு

காசம், க்ஷயம், சளி, இளைப்பு, இருமல், கஷ்ட சுவாசம், கோழை, கபக்கட்டு, இவைகள் எவ்வளவு நாள்பட்டதாயிருந்தாலும் சரி, 9-வித காசமும் அதிசயம் தீரும். 48 நாள் பஸ்பம் ரூ. 32. 24 நாளைக்கு ரூபா 16.

நற்சாட்சி:— தங்கள் குருதாளகபஸ்பம் ஒரு மண்டலம் சாப்பிட்டதில் இருமல், ரத்த வாந்தி இளைப்பு இவைகள் குணமாயிருக்கிறது ஆர். கந்தையா செட்டிய் டாக்டர், பாயிண்டு பீட்ரோ சிலோன் 18—9—25.

எல்லா மருந்துகளுக்கும் வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்

சித்த ஆயுள்வேத வைத்திய ஆசிரியர்

**C. மலையப்பசாமி.** நித்தியானந்த வைத்தியசாலை பழனி, S. I.

சென்னை பிராஞ்சு ஆபீஸ்:—முருகன் ஏஜன்ஸி 43 அரமனைக்காரத் தெரு ஜி. டி. சென்னை



# சேலம் முனிசிபாலிட்டி.

## நோட்டீஸ்

நாளது ஆடி மீ 26-உ (10—8—27) புதன்கிழமை முதல் 29-ந் தேதி (13-8-27) சனிக்கிழமை வரையில் சேலத்தில் மாரியம்மன் திருவிழா காலத்தில் செவ்வாய்ப்பேட்டை சந்தைப்பேட்டையில் கால் நடை சந்தை கூடும். அதே சமயத்தில் சேலம் விக்டோரியா மார்க்கெட்டில் கால் நடை விவசாயம் கைத்தொழில் வகையறா காட்சியும் வைக்கப்படும், சிறந்தவைகளுக்கு பரிசுகள் அளிக்கப்படும். உயர்ந்த கால் நடைகளையும் கைத்தொழில வகையறா சாமான்களையும் அச்சமயம் கொண்டுவரவேணுமாய்க் கோறப்படுகிறது.


S. நஞ்சண்ண செட்டியார்,

சேர்மேன்.



இனும்! இனும்

முனையில் இரிடியம் உள்ள 14 Kt. தங்க நிப்பு போட்ட Self-filling பௌண்டன்பேனு இனும்.




எங்கள் 18 காரட் ரோல்டு கோல்டு பின்புறம் விசித்திர வேலை செய்யப்பட்ட லீவர் பாக்கெட் கெடியாரம் வாங்குகிறவர்களுக்கு மேலேசொல்லியபடி பௌண்டன் பேனுஇனுமாய் அனுப்பப்படும. கடியாரம் விலை ரூ. 4-12-0. 5வருஷம் உத்தரவாதம். உடனே எழுதுங்கள்.

CANADIAN WATCH PEOPLE
George Town, Madras.



## கணித சோதிடம்

பரவித கணிதப்படி கணிதஞ்செய்து பலன்கள் கூறப்படும. ஒரு வருஷத்திற்கு மாதவாரி பலன்கள் நுட்பமாயும் விவரமாயும் எழுதி அனுப்ப ரூபாய் இரண்டு. ஆரூடம் 5 கேள்விகளுக்கு விவரமான பதில் எழுதி அனுப்ப ரூபாய் ஒன்று. விவாக விஷயம் ரூபாய் ஒன்று. விவாக விஷயத்தைப்பற்றி நாங்கள் எழுதி அனுப்புவதைக்கொண்டு பெண்ணுக்கு புருஷனும், புருஷனுக்குப் பெண்ணும இன்னுரென்று வெகு சுலபமாய் நிச்சயிக்கலாம். எங்களிடம் அருமையான பூர்வீக சோதி நூற்கள் பலவுள்ளதால் நாங்கள் எழுதி அனுப்பும் பலன்கள் பொதுப்பலன்களாயிராமல் விவரமாகவும் சாஸ்திரீகமாகவுமிருக்கும். உங்கள் ஜாதக நகலாவது கடிதம் எழுதும் நேரத்தையாவது தெரிவியுங்கள்.

தே. ஆறுமுக செட்டி,

முதலியார் பேட்டை, புதுச்சேரி.



பார்ப்பனரல்லாதார்

சமூக முன்னேற்றத்திற்கு

உண்மையுடன் உழைப்பவன்

# "குமரன்"

ஆதலின் இன்றே சந்தாதாரராய்ச்சேர்ந்து நாட்டின் விடுதலை வழி கடைப்பிடியுங்கள்.

ஆணித்தரமான அபிப்பிராயம்,

அச்சமற்றகண்டனம் ஏராளமான செய்தி.

தேனென இனிக்கும் செந்தமிழ்நடை,

தேசிய தமிழ் வாரப்பத்திரிகைக்குள் தலைசிறந்து, இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் ஏராளமான சந்தாதாரர்களை உடையது.

எனவே விளம்பரத்திற்குத் தகுந்த பத்திரிகை

'குமரன்' அன்றிவேறில்லை.

இன்றே மானேஜருக்கு எழுதி விபரம் அறியுங்கள்

மாதிரிப்பிரதி இனும் !

மானேஜர்.

தனவைசியன் கம்பெனி லிமிடெட்

காரைக்குடி

'குமரன்'

வழிபற்றி உண்மை நெறி காண்மின!

வாரப்பதிப்பு

வருடச்சந்தா

உள்நாடு ரூ. 5

வெளிநாடு ரூ. 6

மாதப்பதிப்பு

வருடச்சந்தா.

உள்நாடு ரூ. 1-8-0

வெளிநாடு ,, 2-0-0

மானேஜர்.

# சேலம்
## சுத்த கதர் ஜவுளிகள்.

கல்யாண காலங்களுக்கு விசேஷமாய்

**பட்டு ஜரிகை பேட்டுகளினால் தயார் செய்த கதர்**

நமது சொந்த தறிகளால் தயார் செய்யப்பட்ட கைஸ் நூலினால் பலவிதமான ஜரிகை பேட்டுகளில் தயார் செய்த 54" 4½ 5, 6, 7, 8, 9, 10 முழம் வேஷ்டி தகைளும் 45×5 ஜரிகைப்பேட் மேல் அங்கவஸ்திரங்களும் சேலை பட்டுகுண்டஞ்சு, கரையில் 7, 8, 9 முழம் வேஷ்டிகளும் பலவிதமான கலர்களில் தயார் செய்த 45×9 சேலைகளும் சில தகைகளும் ஜமக்காளங்களும் கைவசமிருக்கின்றன. விலை ஜாப்தாவுக்கு எழுதவும். அத்தாக்ஷி பத்திரம்.

ஸ்ரீமான் C V ஜெயகோபால செட்டியார் கைநூலால் கைத்தறியால் தயார் செய்யப்பட்ட சுத்த கதர் துணிகளையே உற்பத்திசெய்து நியாயமான விலைக்கு விற்றுவருகிறார். (Sd) S. Ramanathan, காரியதரிசி கதர் இலாக்கா.

C V ஜெயகோபால செட்டியார்,

கதர் வியாபாரம், சேலம்





லைட்கள், மாண்டில், டூம், தனித் தனி சாமான்யாவும் விலைநயமாய் கிடைக்கும். கேட்லாக் இனாம்.

ஸன் கம்பெனி, தஞ்சாவூர்



## திருப்பூர்
### சுத்த கதர் ஜவுளிகள்.

பலரகம் வேஷ்டிகள், துண்டுகள், வெள்ளை பீஸ் ரகங்கள், ஷர்ட்டிங், கோட்டிங், சீட்டி தினுசுகள், தாவணிகள், சுங்கடி சேலைகள் இன்னும் அநேக தினுசுகள் எங்களிடத்தில் கிடைக்கும். தேவைக்கு ஆர்டர் செய்யுங்கள். வி. பி. அனுப்ப முடியாத வெளிநாடுகளுக்கு பூராத் தொகையையும் முன் பணமாக அனுப்பவேண்டும்.

(அத்தாட்சி பத்திரம்.)

ஸ்ரீமான் ஆர். எம். எஸ். சிதம்பரம் செட்டியார், முத்துசாமி செட்டியார் கைநூலால் கைத்தறியால் தயார்செய்யப்பட்ட சுத்த கதர் துணிகளையே உற்பத்திசெய்து நியாயமான விலைக்கு விற்றுவருகிறார்.

S இராமநாதன்: காரியதரிசி, கதர் இலாகா

விலாசம்:—

ஆர். எம். எஸ் சிதம்பரம் செட்டியார்,

முத்துசாமி செட்டியார்,

கதர் டிப்போ, திருப்பூர். (தென் இந்தியா)



## மனமறி நூல்

ஒருவர் மனதில் நினைத்ததை இன்னதென்று தெளிவாய்க்கூறும் அருமையான ஆருட சாஸ்திரம் வடமொழி நூலை ஆதாரமாகவுடையது. விலை ரூபாய் ஒன்று மு. வடிவேல் செட்டி, 110, ஈஸ்பரன் தர்மராஜா கோவில் வீதி புதுச்சேரி.



## Photo Hand Camera



லண்டனில் புதிதாய்ச் செய்யப்பட்டது. எவரும் எளிதில் போடோ பிடிக்கலாம். போடோவின் அளவு 3½"x2½" ஆகும். இந்த மெஷினை வைத்துக்கொண்டு மாதம் ரூ. 30 முதல 200 வரை சம்பாதிக்கலாம். சாமான்களுடனும் விவரங்களுடனும் தபால் உள்பட விலை ரூ 4—12—0

Sole Agents ஸ்ரீதனம் அண்டு கம்பெனி.

பிருபம சயாஜ, ஜ. டி. மதராஸ்



## மூன்று மாதத்தில் மோட்டார் ஓட்ட கற்றுக் கொள்ளலாம்

1916ஞ் ஸ்தாபிக்கப்பட்டது.

எங்கள் கம்பெனியில் மோட்டார் வண்டிகளை ஓட்டவும், பிரிக்கவும், பூட்டவும் வேறு பல சிறு திருத்தங்கள் செய்யவும் கற்றுக் கொடுக்கப்படும். தேர்ச்சியுடைய மூன்று மாதம் ஆகும். தேர்ச்சி அடைந்த பின்பு கவர்ன்மெண்டு லைசென்சை எமது கம்பெனி சர்டிபிகேட்டுடன் கொடுக்கப்படும்.

மற்ற விபரத்திற்கு நேரில் எழுதி தெரிந்துகொள்ளலாம்.

மதருஸ் தென்னிந்திய

மோட்டார் இன்ஜினியரிங் ஒர்க்ஸ்,

மைலாப்பூர்-மதருஸ்.



## கதர்ப் பத்திரிகைக்கு

வருட சந்தா ஒரு ரூபாய் மாத்திரம்

அல்லது

8000 கஜம் நூல்.

அகில பாரத சர்க்கா சங்கத்தின் தமிழ்நாட்டு இலாகாவாகிய எங்களால் மாதம் இருமுறை கதரைப்பற்றி மாத்திரம் பிரசுரிக்கப்படும். எட்டுப் பக்கங்களடங்கிய

### "குடி நூல்"

என்ற கதர்பத்திரிகையின் வருட சந்தா ஏழை ஜனங்களின் உபயோகத்தை முன்னிட்டு ஒரு ரூபாய் அல்லது 8000 கஜம் நூல் என்று தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. சந்தாவை முன்னதாகவே மணியார்டர் அல்லது ஸ்டாம்பு மூலமாக அனுப்பவேண்டும். பத்திரிகையை வி. பி. யில் அனுப்புவதில்லை.

அகில இந்தியாவிலும் விசேஷமாகத் தமிழ் நாட்டிலும் கதரியக்கத்தின் முன்னேற்றத்தைப்பற்றி எல்லா விவரங்களும் கதரைப்பற்றிய கதர் பக்தர்களால் எழுதப்பட்ட வியாசம், கதை, கவிதை முதலியவைகளும் குடி நூலில் பிரசுரிக்கப்பட்டு வருகிறது. கதரியக்கத்தில் பக்தியுள்ளவர்கள் சந்தாதாரர்களாகச் சேர்ந்து வேண்டிய உதவிபுரியுமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்.

மானேஜர்,

சர்க்கா சங்கம், ஈரோடு.



## தமிழ் புக்கீப்பிங்.

கணக்கு வைக்கும் முறையை நன்கு போதிப்பது. ஒற்றைப் பதிவு இரட்டைப் பதிவு இரண்டு பாகங்களுமடங்கி இருக்கின்றன. அநேக வியாபார இரகசியங்களையு முடையது. வியாபாரிகள், மாணவர்கள், கம்பெனி உத்தியோகஸ்தர்கள் எல்லோருக்கும் அவசியம் விலை ரூபாய் 1.

தே. ஆறுமுக செட்டி,

முதலியார்ப் பேட்டை, புதுச்சேரி



இனாம்! இனாம்!! இனாம்!!!

## பெண்களுக்கு

அழகான புடவை! உயர்ந்த மல்லில், பச்சை, புளூ, வயலெட், கருப்பு, செம்பு, ஸ்ரீப் கலர்கள் கெட்டிச்சாயம். பளப்பளப்பான ஜரிகைத்தோற்றமுள்ளது.

2¾ அகலம் 18 முழம் புடவை ... ரூ. 4—4—0

5 முழம், அசல் பட்டு, குஞ்சம் கட்டின

விலக் அங்கவஸ்திரம் ... ... ரூ 4—8—0

2¾ அகலம் 7½ முழம் அழகான கை

செலவு வேஷ்டி ஜோடி ... ... ரூ. 4—6—0

"ஸ்பெஷல்" கேட்லாக் இனாம்!

The Madura Oriental Trading Co.,

Laxmi Cloth Store, MADURA.



முன் விலை ரூ. 14. இப்பொழுது ரூ. 7

22 காரட் ரோல்டு கோல்டு புது மாடல் கைக்கடியாரங்கள்



மேற்கண்டபடி எந்த ஷேப் வேண்டுமானாலும் எனாமல் டயல் மேல்பாடு மிகவும் உறுதியான கைப்பில் கட்டிக்கொண்டால் தங்க ஆபரணம் போல் இருக்கும் ஒவ்வொரு கடியாரத்திற்கும் ரோல்டு கோல்டு அமெரிக்கன் கைச்சங்கிலி இனாமாய்ச் சேர்த்து அனுப்பப்படும் 5 வருஷம் உத்திரவாதம். ரூ. வழுபடி.

CANADIAN WATCH PEOPLE,

George Town, Madras.


ஸ்ரீமதி நாகம்மாளவர்களால், ஈரோடு "உண்மை விளக்கம்" பதிப்பகத்தில் பதிப்பிக்கப்பெற்று வெளியிடப்பட்டது.